Koviloor Digital Library 5-6

ஆத்ம தரிசனம்

(எனது குருநாதர்)

*

Acc. No. 5436

சுவாமி நித்தியானந்தா
வடகுமரை,
சார்வாய் (P. O.), ஆத்தூர், சேலம்.

KOVILOOR MADALAYAM
KOVILUR 630 307
MANAGIRI VIA

சுவாமிகளின் 60-வது
ஜெயந்தி நிறைவு விழாவில் வெளியிடப்பெறுறது

229/9

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆத்ம தரிசனம்

(எனது குருநாதர்)

5-6

கோவிலூர் ஆதீனம்
5436
R65
கோவிலூர்-630 307

சுவாமி நித்தியானந்தா
வடகுமரை
சார்வாய் (P.O.) ஆத்தூர், சேலம்

சுவாமிகளின் 60-வது ஜெயந்தி நிறைவு விழாவில்
வெளியிடப் பெற்றது

Koviloor Digital Library

முதற்பதிப்பு—1974

விலை : ரு. 1-00

அச்சிட்டோர் :
ஏசியன் அச்சகம்,
சென்னை- 600014.

Koviloor Digital Library



ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள்
வடகுமரை

Koviloor Digital Library

Koviloor Digital Library

அகஸ்தியர் கீதம்

இறையருளின் பேரொளியை இயற்கையிலே கண்டான் !
எல்லோர்க்கும் இனியவனாய் எளியகுடில் வாழ்ந்தான் !

மறைவறியா மாமுனிவன் மகரிஷிஅப் பண்ணு
வடகுமரைக் கோயிலில் மகாசமாதி கொண்டான் !

நிறைஅறுபா ணண்டுவிழா நிகரிலாத முறையில்,
நித்தியா னந்தரோடு நெருங்கியமெய் யடியார்

துறைகமழ்ந்து தீபங்கள் அறுபதொன்று சுடரத்
துலங்குமலர் வெளியீடும் இயங்கிடச்செய் தனரே !

Koviloor Digital Library

முன்னுரை

தண்ணியற் சொல்லும் அளவிலா அன்பும்
தாயெனச் செய்கின்ற அளியும்,
கண்ணொளிச் சிறப்பும் குழந்தைபோல் இயல்பும்
கருத்தினில் வஞ்சமொன் றில்லா,
எண்ணமும் வாய்விட் டொலிபெற நகைக்கும்
ஏற்றமும் அநுபவ முதிர்வும்,
நண்ணிய முனிவன் அப்பண்ண சாமி
நாமமும் புகழும்வா ழியவே!

வடகுமரையில், வந்தவர்களை அன்பினால் அணைத்து, இன் சொல்லால் பிணித்துக் கண்ணொளியால் மயக்கி வாழ்ந்த ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளிடம் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்கள் பலர். மலரையும் பறவையையும் வானத்தையும் மலையையும் பார்த்துப் பார்த்து அவற்றின் அழகிலே சொக்கி நிற்கும் அழகுணர்ச்சி உள்ள பெருமான் அவர். இனிய குரலால் அபிராமி அந்தாதியையும் திவ்வியப் பிரபந்தத்தையும் பாடிக் கண்ணீர் விட்டு உருகும் பக்தசிகாமணி அவர். குழந்தையெனக் கள்ளம் கபடற்ற சிரிப்பு, வெண்கலம் போல ஒலிக்கக் களிப்புக் கடலில் ஆழ்கிறவர்; தம்மை மறந்த சமாதியிலே மணிக்கணக்காக ஆழ்ந்து கிடக்கும் அநுபூதிமான்; வந்தவர் வயிறு வாடாமல் உணவளிக்கும் அன்னை; வேண்டுகிறவர் குறை தீர்க்க யாரிடமும் சென்று பரிந்துரை பகரும் பண்பாளர்; அறிவுமிக்கவருடைய கருத்துகளிலே மிதந்து சுடர் விடும் கதிர் விளக்கு; பாமரனிடமும் மனம் ஒன்றிப் பழகும் சௌலப்யம் உடையவர்; யாருடைய தயையையும் எதிர்பாராது நிமிர்ந்து ஓங்கிநின்ற மலை; யாரிடத்தும் பணிவாகப் பழகிக் குழையும் மெழுகு; ஆழங்காண முடியாத அநுபவக்கடல்; தம்மை மறைத்துக்கொள்வதில் நாட்டமுடையவர்.

இத்தகைய ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளிடம் அன்பு வைத்து, அடிமையாகித் தொண்டு பூண்ட நல்லோர் ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள். சுவாமிகளைப்பற்றித் தாம் அறிந்தவற்றைத் தொகுத்து இந்தச் சிறிய புத்தக வடிவில் தந்திருக்கிறார். படித்தவர்கள் இவருடைய அன்பை உணர்வர்; சுவாமிகளின் பெருமையை ஒருவாறு உணர்வர்.

கி. வா. ஜகந்நாதன்

Koviloor Digital Library

நான் கண்ட மஹான்

பெ. தூரன்

அநுபூதியடைந்த மகான்களில் பலர் தம்மை உலகுக்குக் காட்டாமலேயே உலகில் வாழ்ந்து உற்ற நாள் வரும்போது தமது பூத உடலை நீத்து மறைந்துவிடுகிறார்கள். உலகப் புகழை அவர்கள் விரும்புவதில்லை. ஆனால், அவரை அண்டி நின்ற சிலருக்குமட்டும் அவர்களுடைய பெருமை புலப்படுகிறது அண்டி நின்றோர்களிலும் ஒரு சிலருக்குத்தான் அந்த பாக்கியம் கிட்டுகிறது. மற்றவர்கள் தம்முடன் வாழும் அவர்களைச் சாதாரண மனிதர்களாகவே எண்ணுகிறார்கள். சக்தி வாய்ந்த காந்த ஊசி அருகிலேயே இருந்தாலும் மரக்கட்டை அதனால் ஈர்க்கப்படுவதில்லை. ஆனால், இரும்பு ஈர்க்கப்படுகிறது. அதனால் இரும்பும் ஓரளவு காந்தசக்தியைப் பெற்றுவிடுகிறது.

இப்படி வாழ்ந்து மறைந்த அநுபூதி மகான்தான் அப்பண்ண முனிவர். அவர் எங்கு சென்றாலும் தம்மைப்பற்றி அறிந்து கொண்டவர்களும் அதை வெளிப்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையை வற்புறுத்துவார்கள். தாமாக வருபவர்களை அவர் ஒதுக்க மாட்டார். அவருடைய கருணை உள்ளம் அதற்கு இடங்கொடாது.

நான் அதிர்ஷ்டவசமாக அவருக்கு ஆட்பட்டவனாக, எப்படியோ ஆனேன. என்னுடைய சொந்த ஊர்ப்பக்கத்திலே அவர் தமது பாலப்பருவத்திலே சுற்றியதுண்டாம். "அந்த உறவுதான் இப்பொழுது கவர்ந்திருக்கிறது" என்று ஸ்வாமி அப்பண்ணா கூறுவதுண்டு,

சுவாமிகள் தம் வலக்கரத்தை ஓரளவுதான் பயன்படுத்த முடிந்தது. இது பிறவியிலேயே ஏற்பட்ட குறைபாடு அல்ல. இடையிலே நேர்ந்த ஒரு நிகழ்ச்சியால் இது ஏற்பட்டது. எதனால் இப்படி நேர்ந்தது என்று பல நாள் நான் அறிந்துகொள்ள மனத்திலேயே ஆவல் கொண்டிருந்தேன். என்னென்னவோ காரணங்கள் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவையெல்லாம் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. சுவாமிகளே இதைப்பற்றி கூறினால் உண்மையை அறிந்துகொள்ளலாம் என்று மிகவும் ஆசைப்பட்டதுண்டு. ஆனால் அவரிடம் அதைக் கேட்டறிய என் மனம் ஒப்பவில்லை.

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI V.

Koviloor Digital Library

என் ஆசையை அவர் எப்படியோ அறிந்துகொண்டிருக்க வேண்டும். எல்லோருடைய உள்ளத்தையும் அறிந்துகொள்ளக் கூடிய அம்மகானுக்கு இது எளிதான காரியம்.

ஒரு நாள், சுவாமி அப்பண்ணப்பெருமானுடன் தனியாக அமர்ந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். அந்தச் சமயத்திலே பேச்சுப் போக்கிலே தமது வலக்கைக்கு ஏற்பட்ட துன்ப நிகழ்ச்சியை என்னிடம் கூறினர்.

அந்தக் காலத்திலே, இளமைப்பருவத்திலே, கடவுள் வெறி கொண்டு ஊர் ஊராகச் சுவாமிகள் அலைந்துகொண்டிருந்தாராம். ஒரு நாள் தம் சொந்த ஊருக்குச் சுமார் நாற்பது கல் தொலைவில் உள்ள, ஒரு சிறு கிராமத்திற்கு அவர் போய்ச் சேர்ந்தார். நடந்தே செல்வது என்ற விரதமும் அக்காலத்தில் பூண்டிருந்தாராம்.

மாலை மயங்கும் நேரம். சிவன் கோயிலில் பூஜை மணி ஒலித்தது. சுவாமிகள் அந்தக் கோயிலுக்குள் நுழைந்தார். அர்ச்சகர் மற்ற பரிவார தேவதைகளுக்குப் பூஜை செய்ய மூல ஸ்தானத்திலிருந்து கிளம்பியிருந்த சமயம்.

சுவாமிகள் சிவலிங்க மூர்த்தியின் கருவறைக்குள் நுழைந்து, தம்மை மறந்து, லிங்கத் திருமேனியின் முன்பு மண்டியிட்டு, அதைத் தமது திருக்கரங்களால் அணைத்துக்கொண்டு, உலக நினைவே இன்றி இருந்தார்.

தமது கடமைகளை முடித்துக்கொண்டு கருவறையை இழுத்து மூடுவதற்காக அர்ச்சகர் உள்ளே நுழைந்தார். நுழைந்தவர் மண்டியிட்டு இருக்கும் சுவாமிகளை அங்கிருந்த மங்கிய வெளிச்சத்திலே பார்த்தார்.

துணுக்குற்ற அர்ச்சகர் "நீ யார்?" என்று அதட்டும் குரலிலே முழங்கினர்.

அந்த முழக்கத்தால் தமது மோனநிலை கலைந்து அப்பண்ணப் பெருமான் மண்டியிட்டவாறே நிமிர்ந்து பார்த்தார். அவருடைய கண்கள் ஜொலிப்பதை அர்ச்சகர் கவனித்தாரில்லை. "நீ யார்?" என்ற வினு அவரை ஓர் ஆழ்ந்த தத்துவ விசாரணைக்குக் கொண்டு சென்றுவிட்டது. அண்ணாந்து பார்த்துக்கொண்டே "ஆமாம், நான் யார்?" என்று தம்மையே கேட்டுக்கொள்பவர் போல அவர் பேசினர்.

அவர் திருதிருவென்று விழிப்பதைப் பார்த்த அர்ச்சகருக்குப் பெரியதோர் ஐயம் ஏற்பட்டுவிட்டதாம். அப்பொழுதெல்லாம் கோயில்களில் பிரதிஷ்டை செய்துள்ள மூலவர்களைப் பெயர்த்து,

Koviloor Digital Library

அவற்றின் அடியிலே இடப்பட்டிருக்கும் நவமணிகளைத் திருடும் சம்பவங்கள் சில நடந்திருந்தன.

"அந்தக் காலத்தில் நான் பூணூல் அணிந்திருந்தேன் உடம்பெல்லாம் எனக்கு உரோமம். அப்புறம் என்ன? அர்ச்சகர் கூக்குரலிட்டார். கிராமத்து மக்கள் திரண்டுவிட்டார்கள். பிறகு என்ன? நொறுக்க வேண்டியதுதானே?" என்று சொல்லிவிட்டு அப்பண்ணப் பெருமான் சிரித்தார். அவர் யாரிடத்திலும் கோபம் கொண்டதாகவே தெரியவில்லை.

உயிரே போய்விட்டது என்று நினைத்து, சுவாமிகளை அங்கேயே போட்டுவிட்டு அந்த மக்கள் சென்றுவிட்டார்கள்.

மறுநாள் காலையில், சுவாமிகளின் திருமேனியை அப்புறப் படுத்தும் எண்ணத்தோடு பல பிரமுகர்கள் கூடினார்கள். "ஏதோ நாலடி போட்டு முடுக்காமல் இப்படிச் செய்துவிட்டார்களே!" என்று அவர்களுக்குச் சிறிது வருத்தமும் அந்த நிலையில் ஏற்பட்டிருந்தது.

மேலும் பலர் அங்கு வந்து சேர்ந்தார்கள். யாரோ ஒருவர் "என்னவோ உயிர் இன்னும் இருக்கிறது போல் தெரிகிறதே!" என்று தெரிவித்தார். உடனே தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளித்தார்கள். சுவாமிகளுக்கு பிரக்ஞை வந்துவிட்டது. அதைக் கண்டு எல்லாருக்கும் ஒரு மன ஆறுதல்.

கூட்டம் அதிகமாயிற்று. அதிலே ஒருவர், "இவர் நமது ஐயங்கார் மகனைப் போல் இருக்கிறதே!" என்றாராம். "ஆமாம், சுவாமி, சுவாமி என்று கடவுள் பயித்தியம் பிடித்து ஊர் ஊராக அலைந்துகொண்டிருக்கும் அவரேதான் இவர்" என்று மக்கள் வருத்தப்பட்டார்களாம். "ஐயோ, இவரையா அடித்து நொறுக்கினோம்?" என்று அழாக்குறையாகப் பலர் பேசிக்கொண்டார்கள். என்ன உதவி வேண்டுமானாலும் அந்த மக்கள் செய்யக் காத்திருந்தார்கள்.

ஆனால் அப்பண்ணப்பெருமான், "ஒன்றும் வேண்டாம். எல்லாம் ஈசனது திருவிளையாடல். என்னை இந்த ஊரை விட்டு வேறு ஊருக்குச் செல்லக் கொஞ்சம் உதவி செய்யுங்கள். வாகனத்தில் நான் ஏறுவதில்லை" என்று அமைதியாகப் பதில் கொடுத்துவிட்டு, அந்த ஊரை விட்டுச் சென்றாராம்.

அடிபட்ட வலக்கரத்திலே எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதைச் சரியாகக் கவனியாமல் விட்டுவிட்டதால் அந்தத் திருக்கரம் உணவை வாயில் எடுத்துவைக்க உதவாமற் போய்விட்டது.

Koviloor Digital Library

ஆனால், மற்றப்படி அதைப் பயன்படுத்த முடியும். நன்ருக மடக்கத் தான் இயலாது.

"தூரன், இப்படி எத்தனையோ விஷயங்கள் - கேட்டால் நம்பக்கூட மாட்டார்கள். அவற்றையெல்லாம் அங்கங்கே குறித்து வைத்திருக்கிறேன். ஒரு நாள் கொண்டுவந்து கொடுக்கிறேன். பார்த்துக்கொள்ளலாம்" என்று அன்று தெரிவித்தார். ஆனால், அதன் பிறகு பல முறை நான் ஆவலாக அக்குறிப்புகளைத் தரும் படி கேட்டும், "எங்கேயோ கிடக்கிறது. பார்க்கலாம்" என்றே சொல்லிக்கொண்டிருந்தார்.

அந்தக் குறிப்புகள் யாருடைய வசத்தில் இப்பொழுது உள்ள னவோ, எனக்குத் தெரியாது. அக்குறிப்புகளை வைத்திருப்போர் வெளியிட்டால் அப்பண்ணப்பெருமானின் பெருமைகளை மற்றவர் களும் உணர்ந்துகொள்ள முடியும். அந்த மகானின் அருளால் இந்த ஆவல் நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறேன்.

Koviloor Digital Library

சுவாமிகளின் அருள் வாக்கு

வணங்கத் தகுந்த இறைவா !

ஆணவம், காமம், குரோதம், பேராசை, துவேஷம் எம்பால் வாராதொழியவும், தெய்வீகசக்திகள் எம் உள்ளத்தில் நிரம்பிடவும் அருள்புரிவாயாக !

உலகில் காணும் நாமரூபங்கள் அனைத்திலும் உம்மையே கண்டு, உமக்கு நிலைத்த தொண்டாற்றி, உம்மை மறவாது சந்ததமும் நினைந்துருகவும், நினது புகழ் பாடிடவும், எப்பொழுதும் நின் நாமம் என் நாவில் ஒலித்திடவும், என்றென்றும் இதேபோல் நின்னுள் யான், என்னுள் நீயாக இருக்கும் நித்தியமான இந்நிலையை நிலை நிற்கக் கருணை பாலிப்பாயாக !

சுவாமிகள் திருவாய் மலர்ந்த மொழியமுதம்

பகவான் ஒருவனே சாஸ்வதமானவன் ; நித்திய வஸ்து. மற்றனைத்தும் தோன்றி மறைவன ; நிலை இல்லாதன. பகவான் ஒளி மயமானவர். அன்பே அவரின் மங்களகரமான தெளிவு சொரூபம். சர்வ ரக்ஷகனாகவும், இருட்டாகவும், பிரளயமாகவும், அழிப்பவனாகவும் எல்லா விதத்தும் எக்காலத்தும் யாவற்றிற்கும் அவரே அதிஷ்டானம். பரமாத்மா ஆதி, நடு, அந்தம் இவை ஒன்றுமில்லா அநாதி. அணுவிற்கும் அணுவானவர். ஆனால், எல்லாவற்றையும்விட மிக மிகப் பெரிய வஸ்து. பகவான், வற்றாத எல்லையற்ற அளவில் அடங்காத கருணை சமுத்திரம். அள்ளக் குறையா அருட்களஞ்சியம். எல்லாவற்றிலும் ஒளிர்ந்து ஒவ்வொரு ஹிருதயத்திலும் சர்வாந்தர்யாமியாய்ச் சுடர்கிறார். சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் மூன்றையும் இவரே புரிகிறார். இஃது இவரின் அருளாடல்.

உலகனைத்தும் உருவாக்கி, நன்கமைத்து, மிளிரச் செய்த சிற்பியும் இவரே. பகவான் இரண்டற்ற ஏக வஸ்துவானாலும் ஒன்றான இதுவே பலவாகி யாவற்றிலும் வியாபித்துள்ளார் பரிபூரணர். நன்மை தீமைகளோடு சம்பந்தமின்றி இணைந்துள்ளார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆத்ம தரிசனம்

உலகில் தருமம் குறைந்து அதருமம் மேலிடும் போது அவதாரம் செய்கிறார்கள் பல மகாத்மாக்கள்.

பல மகாத்மாக்கள் தம் வரையில் சித்தி பெற்று, உலகிற்குத் தெரியாமலும், பிரசாரம் செய்யாமலும், மறைந்துவிடுகிறார்கள். சில பேர் உலகம் உய்ய, பாடல்கள் வாயிலாகவும் நூல்கள் வாயிலாகவும் வழி காட்டியிருக்கிறார்கள். பதினெட்டுச் சித்தர்கள், நாயன்மார்கள், சமய குரவர்கள், ஆழ்வார்கள் ஆகியோர்கள் பக்தியால் ஆடிப்பாடி சித்தி பெற்ற பல சான்றுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தமிழ் நாடு ஞானத்துக்கும் சங்கீதத்திற்கும் உற்பத்தி ஸ்தானம். சில பேர் பக்திப் பரவசத்தால் பாட ஆரம்பித்தால் பாடல்கள் ஜீவநதி போல் பெருகி வந்துகொண்டே இருக்கும். அவை நம்மை மெய் மறக்கச் செய்து, மயிர் சிலிர்க்க வைக்கும். அத்தகைய பக்தர்கள் வட நாட்டிலும் தமிழ் நாட்டிலும் இருந்திருக்கிறார்கள். அவையாவும் தம்மை மறந்த நிலையில் தோன்றியவை. அந்தப் பெறற்கரிய பெரிய நிலையைப் பல பேர் பல வழிகளில் உபயோகப்படுத்திக் கெட்டுவிடுகிறார்கள். சில பேர் மேன்மை அடைந்து, சித்தி பெற்று, வழி காட்டி அருள் புரிகிறார்கள். மகான்கள் என்பவர்கள் நல்வழியில் நடந்து, மனத்தை அடக்கி, ஐம்புலன்களையும் சுட்டு, வென்று, அன்பின் வழியே நடந்து, உண்மையில் வெற்றி கண்டு அஷ்டமாசித்தியும் அடைந்தவர்கள். அவர்கள் சமதர்மக் கொள்கை உடையவர்கள். தோற்றத்தில் அவர்கள் சாதாரண மனிதரைப் போல் இருப்பார்கள். ஆனால், அவர்கள் மனம் எப்பொழுதும் நிஷ்டையிலேயே லயித்திருக்கும். அவர்கள்தான் சைதன்ய பிரபு. அவர்களிடம் பேதாபேதம் கிடையாது. அவர்களைப் பார்த்தாலே அன்பு தவழும்.

என்னைநான் கண்டபடி இப்புவியில் எல்லோரும்
தன்னையே காணத் தகுங்காணும்—சொன்னேன்
ஒளிநாட்ட மோடுமனம் உள்நாட்டம் பெற்று
வெளிநாட்டம் ஆகா விடின்.

இவை யாவும் பொருந்திய குருவை நாம் அணுகினால் நாமும் சித்த புருஷர் ஆகலாம். ஆனால், அவர்கள் சொல்கிறபடி நடந்தால் தான் யாவும் கிடைக்கும். நாம் நம்மைத் தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். எந்த விதக் கஷ்டம் வந்தாலும் உண்மைக்குப் புறம்பாக நடப்பது, பேசுவது கூடாது. உண்மை நெறியில் நடக்க நடக்க, நம்மை அறியாது அன்பு வளரும். அன்பு வளர வளர, பக்தி பெருகும். பக்தி மேலீட்டால் உற்ற குரு தாமே வருவார்கள். அவர்கள் வந்தால் விடாப்பிடியாக நாம் பிடித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சொல்கிறபடி சொல்லிலும், செயலிலும் நாம் நடக்க வேண்டும். உலகில் உள்ள மக்கள் யாவரும் விருப்பு வெறுப்பு அற்று, இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவித்து, "யாவும் நம் செயல் அல்ல;

Koviloor Digital Library

எல்லாம் கடந்த சக்தி நம்மை நடத்துகிறது. நாம் ஒரு கருவி. சக்தி இயக்குகிறபடி "நாம் இயங்குகிறோம்" என்ற மனோ பாவம் இருக்க வேண்டும். அந்தக் காலத்தில் காட்டிற்குச் சென்று மரவுரி தரித்தல், கனி, சருகு புசித்தல், ஹடயோகம் செய்தல், தலைகீழ் நின்று தவங்கள் புரிதல், யாகம் செய்தல் என இவ்வாறு பெரியோர்கள் பல மார்க்கங்களில் சென்றிருக்கிறார்கள். ஆனால், கலியுகத்தில் அத்தகைய கடுந்தவம் வேண்டா. குடும்பத்திலேயே இருந்துகொண்டு சாட்சாத்காரம் அடையலாம். வீட்டை விட்டுக் காட்டுக்குப் போக வேண்டா. இல்லறந் தான் சந்நியாசம். சந்நியாசம் என்பதற்குப் பொருள், தியாகம். சகலத்தையும் பரித்தியாகம் செய்வதுதான் சந்நியாசம். மனைவி மக்களோடு பெரிய சம்சாரியாக சகல சம்பத்தோடும் வாழ வேண்டும். ஆனால், மனத்தில் 'எதுவும் நமக்குச் சம்பந்தம் அல்ல, யாவும் நாம் செய்யவில்லை; எல்லாம் நமக்கு அப்பாற்பட்ட சக்தி நடத்துகிறது' என்ற பற்றற்ற மனத்தோடு வாழ வேண்டும்.

"தாமரை இலையில் தண்ணீர் எவ்வாறு ஒட்டாதிருக்கிறதோ அவ்வாறு வாழ வேண்டும். பொதுச் சொத்தைக் (Trust property) கொண்டு எப்படித் தருமங்களைச் சரிவரச் செய்து வருகிறோமோ, அதைப் போல, இல்லறத்தையும் தரும பரிபாலனம் செய்து வர வேண்டும். தருமச் சொத்தைச் சில பேர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அப்படி நாம் செய்வது சரியல்ல. உண்மையும், அன்பும், பக்தியும் வளர வளரத் தீய எண்ணங்கள் தலை காட்டா. 'மனைவி, மக்கள், உற்றார், உறவினர் - எதுவும் சொந்தமல்ல. யாவும் நமக்கு அப்பாற்பட்ட சக்தியினுடையது' என்னும் மனோபாவம் வளர வளர, யாவும் தெரியும். மக்கள் யாவரும் சந்நியாசிகள் தாம்; ஞானிகள் தாம். இதை உணர்ந்து, நடைமுறையில் உண்மையோடும் தியாக உணர்ச்சியோடும் நடந்தால் யாவரும் சாட்சாத்காரம் அடைய முடியும். கடவுள் என்பது என்ன? அவர் எங்கும் வியாபித்து இருக்கிறார். அவர் கல், மண், கொடி, செடி, மற்றும் உயிர் உள்ள எல்லா ஜீவராசிகளிடமும் இருக்கிறார். மனிதனின் இருதயக் குகையில்தான் கடவுள் வசிக்கிறார். அதை அறிந்து, நாம் யாவரிடமும் அன்பு செலுத்தி, யாவரையும் சமமாகப் பாவித்துச் செயலில் சம நோக்கோடு ஒழுக வேண்டும். கீதா போதனை சொல்வது போன்று, எல்லாவற்றையும் நமக்கு அப்பாற்பட்ட சக்திக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். 'நான்' என்னும் அகம் பாவம் அழிய வேண்டும். வாயால் சொன்னால், நினைத்தால் போதாது. செயலில் கொண்டுவர வேண்டும். உள்ளத் தூய்மை உண்டாக உண்டாக, உள்ளத்திலேயே குருவைக் காணலாம். உள்ளமே குருவாக பல தூய எண்ணங்களை உருவாக்கும். அதன்படி நாம் கடைப்பிடித்து வழுவாது நடக்க வேண்டும். பஞ்ச பூதங்களையும் அடக்கி, மனத்தை ஒருமுகப் படுத்துங்கால் யாவும் சித்திக்கும். நல்லதையே பார்க்க வேண்டும்; நல்லதையே கேட்க வேண்டும்; நல்லதையே சிந்திக்க வேண்டும். நல்லதையே பேச வேண்டும்; நல்லதையே செய்ய வேண்டும்; இப்படி நாம் உண்மையோடு நடக்க நடக்க யாவும் சித்தியாகும். மேற்கூறிய இலட்சணங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்ற மஹான் 1914 அன்று (பிரமாதீச வருடம்) அவதரித்தார்.

'ஆசை துறந்து, அன்பு பெருகி, தூய அருள் நெறி காட்டி, அடியார்களை ஆட்கொண்ட அப்பண்ணா, உம் சரிதையைத் தப்பாது எழுத,

Koviloor Digital Library

உத்தமா! என்றனுக்கு ஆற்றல் தந்தருள்வீர்! என்று பிரார்த்தித்து எழுதுகிறேன்.

ஸ்வாமி அவர்களின் ஜாதகம்.

சூ சுக்		சனி	செவ்
புத, ராகு, ல	இராசி		
குரு சங்			கேது

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இலச்சிப்பாளையம் என்னும் கிராமத்திற்கு அருகில், திருமணி முத்தாற்றங்கரையிலே கொண்ணையாறு என்ற ஊரிலே, ரிக் வேதம் பயின்ற காசியப கோத்திரத்தைச் சேர்ந்த வீரநாராயண அய்யங்கார் குமாரர் இராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கும்; நாமக்கல் வட்டம், செருக்கலை கிராமம், லத்துவாடி அக்கிரஹாரத்தைச் சேர்ந்த யஜுர் வேதம் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த வெங்கடேச அய்யங்கார் ஸ்வாமி புத்திரி செல்லம்மாள் என்ற மாதுசிரோன்மணிக்கும், பிரமாதீச வருடம், பங்குனி மாதம், 6-ஆம் தேதி (22-3-1914), சனிக்கிழமை, கிருஷ்ணபக்ஷம், தசமி 28-36-க்கு மேல், ஏகாதசி சம்பூர்ணம், மறுநாள் நாழிகை 29-27, உத்திராட நட்சத்திரம் 39-30க்கு மேல், திருவோணம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில், உதயாதி நாழிகை 56¼-க்கு, தாயார் வீட்டில், செருக்கலையில் சுபஜெனனம். நாராயண ஸ்வாமி என்பது பூர்வாசிரமத் திருநாமம். "அப்பண்ணு" என்னும் செல்லப் பெயரால் எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

நாமக்கல் வட்டத்திலுள்ள ஜமீன் எளம்பள்ளியில் பால பருவம் கழிந்தது. அதன் பின்பு ஈரோடு மஹாஜன பள்ளியில் ஐந்தாவது வகுப்பு வரை பயின்றார். சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சார்வாயில் உபநயனம் நடந்தது. பின்பு, திருமயம் வேத பாடசாலையில் வேத அப்பியாசம் பெற்றார் சில காலம். பின்னர் தாயார் தேகவியோகமானார். உடன்பிறந்த ஒரே தங்கைக்கு விவாஹம் நடந்த பின்னர், அருமைத் தந்தையாருடன் பெரம்பலூர் வட்டம், வடகரை வெண்பாவூரில் சில காலம் வாழ்ந்தார்.

தந்தையார் கம்பராமாயணத்திலும், வில்லிபாரதத்திலும் சிறந்த உபன்யாசம் செய்பவர். அன்னாருடன் அதிக நாள் தங்கியிருக்க

Koviloor Digital Library
வாய்ப்பு இல்லாமல் போயிற்று. பல இடங்களில் பெருமாள் கைங்கரியம் செய்த பின்னர் தங்கையின் இல்லமாகிய சார்வாய் வந்து சேர்ந்தார்.

இது சமயம் வடசென்னிமலையில் உற்சவம் நடைபெற்றது. அந்த உற்சவத்தில் கலந்துகொண்டு ஸ்ரீ முருகனுக்குத் தொண்டாற்றினர். ஒரு முறை முருகன் உற்சவத்தில், ஆனையாம்பட்டி திருப்புகழ் பஜனை கோஷ்டியாருடன் சம்வாதம் புரிந்தார். ஆரம்பத்தில் முரட்டுப்பிடிவாதமும், முன்கோபமுமுடையவராயிருந்ததால் கோஷ்டியாரிடம், "இந்தப்பக்தியால் நீங்கள் இதுவரை கண்ட பயனென்ன?" என்பது போன்ற பல கேள்விகளைக் கேட்டு, முடிவாக, "உங்கள் முருகனைக் காட்டுங்கள், அதற்குப் பின் உங்கள் சொற்படி ஏவல் புரிகிறேன்" எனக் கூற, அங்குள்ளவரில் சிலர் இவரை ஏளனம் செய்தார்கள். சம்வாதம் முற்றிற்று. பஜனைக் கோஷ்டியிலிருந்த ஒருவர், "ஏ அப்பண்ணு! உன்னைத் தண்ணீர் எடுத்துவா என்று சொன்னதற்கு நீ ஏதேதோ பேசுகிறாய்! இந்தா, இந்த குடத்தினுள் முருகன் இருக்கிறார், பார்!" என்று குடத்தைக் கொடுத்தார். அக்குடத்தை எடுத்துக்கொண்டு நீர் மொள்ள ஆற்றுக்குச் சென்றார். சென்று, நீர் முகந்து, குடத்தினுள் உற்று நோக்கினர். என்ன ஆச்சரியம்! கண்டார் ஜோதியை! தரிசனம் பெற்றார்! எழுந்தார், ஆனந்தக் கூத்தாடினர், குதித்தார். ஓடினர். விழுந்தார், புரண்டார்! ஒரே ஓட்டம் பிடித்தார். கோஷ்டியார், வியப்புற்றனர். பல ஊர்களுக்குச் சென்றார். பைத்தியக்கோலங் கொண்டார். **'வெறி அப்பண்ணு'** என்னும் பெயர் பெற்றார். சுற்றி அலைந்து, வடபூண்டி நாவலூரில் சில காலம் வாசம் செய்து, பின் வனசஞ்சாரம் செய்யலானர். தனியிடத்தில் யோகாப்பியாசம், நிஷ்டைகள் எனக் காலங்கழித்தார். பின்பு, தோட்டப்பாடி கிராமத்தில் யோகாப்பியாசம் நிஷ்டையிலிருக்கும் போது, தீபத்திலிருந்த அக்கினிச் சுடர் பட்டு, உடையினைப் பற்றி, வஸ்திரம் எரிந்து, சிகை வரை தாவியது கூடத் தெரியாமல் இருந்து, மற்றவர்கள் பார்த்துக் கூக்குரல் போட்டு நிஷ்டை கலையப் பெற்றார். பின்பு, வடசெந்தூர், கச்சிராபாளையம் மலையில் வாசம் செய்யும் போது, அங்கு ஒரு சாதுவுடன் சேர்ந்து சில மாதங்கள் அப்பியாசங்களைச் செய்தார். பின்பு, தோட்டப்பாடியில் ஆஸிரமம் ஏற்படுத்தி, நிஷ்டை புரிந்து வந்தார். அது போது, சிலர் இவரை வேடிக்கைக்காகவும், விளையாட்டாகவும் பரிகசித்தனர். ஸ்வாமியைப் பரிகசிக்க நிஷ்டையிலிருக்கும்போது வெளிக்கதவைப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அவ்வாறு சென்றவர்களுக்கு, ஆங்காங்கு தனித்தனியாக ஸ்வாமிகள் தரிசனம் தெரியவே, வியப்பும் பயமும் மேலிட்டு, ஆஸிரமத்தில் வந்து, ஸ்வாமிகளை நேரில் கண்டு, திருவடிகளில் விழுந்து பணிந்து, தாம் செய்த தவற்றைப் பொறுத்து மன்னிக்குமாறு பல முறை வணங்கிக் கேட்டுக்கொண்டார்கள். பின்பு, சில மாதங்களில் ஆஸிரமத்தை விட்டு வெளியேறிவிட்டார். பல கோயில்களில் தம்மை யாரும் அறியாவண்ணம் உலாவி வந்தார். வடலூர் ஸ்ரீ இராமலிங்க ஸ்வாமிகளின் உற்சவத்தன்று, பெரும் ஜனக்கூட்டங்களுக்கிடையில் ஒரு சிறிய இடத்தில் இருக்கும் போதே நிஷ்டை கூடிவிட்டது. பூசத்திருவிழாவிற்கு வந்த ஒரு பக்தர், ஸ்வாமியின் நிலையை அறிந்து, கட்டி அணைத்து எடுத்து, இராமலிங்க ஸ்வாமியின் மடத்திற்குக் கொண்டுபோய் உபசரித்தார். பிறகு, நிஷ்டை கலைந்து புறப்பட்டுவிட்டார். 1940-இல் வடகுமரையில் கருப்பப்பிள்ளை வீட்டுக் கொட்டகையில் தியானம் செய்து வந்தார். இரண்டு மாதங்கள்

Koviloor Digital Library

கழித்துப் பல அற்புதச் சித்துகளைச் சுவாமிகளிடம் அன்பர்கள் கண்டார்கள். மூன்று வருஷங்கள் கழித்துப் பெருமாள் கோவிலில் தங்கி இருந்தார்கள். அன்பர்கள் பாலினைச் சிரத்தையுடன் கொண்டு வந்து வைப்பார்கள். சரீர உணர்வு அற்ற நிலையில் இருந்ததால் சுவாமிகளுக்கு அதைப்பற்றி ஏதும் சிந்தனையில்லை. வள்ளியம்மை என்றொரு அம்மையார் பால் கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். ஒரு நாள் பால் சாப்பிட்டபின் எலுமிச்சம்பழமும், புஷ்பமும் அந்த அம்மாளிடம் கொடுத்தார்கள். "உங்கள் பட்டிக்கு வருகிறேன், கேட்டு ஏற்பாடு செய்யுங்கள்" என்றார். பின்னர், அப்பாவுபிள்ளை பட்டியில் தங்கியிருந்தார்கள். இரண்டு மூன்று மாதங்களும் வெறும் பால்தான் சாப்பிட்டார்கள். பிறகு கம்பங்கூழ் கரைத்துக் கொடுத்தால் குடித்தார். பிறகு, அவருக்குக் குழந்தையைப் போல் இரண்டு வருஷங்கள் சாதம் ஊட்டி வந்தார்கள். சாதம் ஊட்டும்போது "அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள்" என்று கூக்குரல் இட்டு அன்பர்களை அகற்றுவார்கள். அறையிலேயே தியானத்தில் இருப்பார்கள். அன்பர்கள் கதவைப் பூட்டி விடுவது வழக்கம். ஆனால், சுவாமிகள் அறையில் இல்லாமல் சிவன் கோயில் மதில்மேல் அப்பொழுது இருப்பார்கள். இது போன்ற பல சித்துகளையெல்லாம் நிகழ்த்தியிருக்கிறார்கள். பிறகு, பெருமாள் கோவில் மண்டபத்தில் கொட்டகை போட்டுச் சில காலம் தங்கியிருந்தார். ஸ்ரீ காளத்திநாதர் சன்னிதியில் அன்பர்கள் அமைத்த ஆசிரமத்தில் தங்கியிருந்தார்கள். அது சமயம், கடலூர் அன்னம்மாள் அவர்கள் சாப்பாடு கொடுத்து அனுசரித்து வந்தார்கள். அப்பொழுது பல மக்கள் வந்து தரிசித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இவர் எதையும் பொருட்படுத்தவில்லை. வடகுமரையிலும், வடசென்னி மலையிலும் ஸ்ரீ முருகனுக்கு வெகு விமரிசையாக உற்சவங்கள் நடந்து, பல தொண்டர்கள் ஆனந்தம் அடைந்தார்கள். பகவான் கருணை புரிவதைப் போல, ஸ்வாமிகள் எல்லா மக்களிடமும் ஜீவஜந்துக்களிடமும் சமமான நிலையை அனுசரித்து வந்ததை அடியார்கள் உணர்ந்து வந்தார்கள்.

காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் சஞ்சார காலத்தில் பக்தர்கள் ஆசார்ய ஸ்வாமிக்கு புஷ்பஹாரம் சமர்ப்பிக்க, அவர், "அதோ நிற்கும் அவருக்கு அணிவியுங்கள்; அவர் ஒரு பெரிய அரிய சக்தி வாய்ந்த அநுபூதிமான்" எனச் சொல்லி, ஸ்வாமியின் பெருமையை விளக்கியுள்ளார். சில பக்தர்கள் ஆரம்பத்தில் ஸ்வாமிகளைப் படம் பிடிக்க (Photo) வேண்டுமென்று கோரினார்கள். ஸ்வாமிகள், "எதற்குப் படம்? வேண்டியதில்லையே!" என உரைத்தார்கள். அவர்கள் தங்களுக்கு அவசியம் ஸ்வாமிகளின் திருவுருவப் படம் வேண்டுமென்று, நிழற்படம் எடுப்பவரைக் கூட்டி வந்து, ஸ்வாமிகளைப் படம் பிடித்தார்கள். ஆனால், ஏமாந்துவிட்டார்கள். படம் விழவில்லை. அன்பர்கள் வியந்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். மற்றொரு சமயம், ஸ்வாமிகளை வணங்கி, படம் பிடிக்க அனுமதி தர வேண்டுமெனக் கேட்க, அனுமதியின்பேரில் படம் பிடிக்கப்பட்டது.

ஸ்வாமிகள் ஆஸிரமத்தில் இருக்கும் போது அவருடன் ஒரு நாக சர்ப்பம் விளையாடிக்கொண்டே இருக்குமாம். யாராவது வரும் சப்தம் கேட்டால் அது மறைந்துவிடும். இராத்திரியில் படுக்கையில் சயனத்திலிருக்கும் போது, அது கட்டிலின் கீழ் படுத்து இருக்கும். ஆஸிரமத்

Koviloor Digital Library

திற்கு யாராவது வந்து தங்க நேரிட்டால், அன்று அவர் படுக்கும் வாசற் படியின் பக்கம் குறுக்காகப் படுத்துக்கொண்டு இருக்கும். இதனை ஸ்வாமிகளிடம் அடிக்கடி நெருங்கிப் பழகிய பக்தர்கள் கண்டும் கேட்டும் இருக்கிறார்கள்.

ஸ்வாமிகள், "ஸ்ரீ காஞ்சி பூர்ணம்" எனப் பெயர் பெற்ற திருக்கச்சி நம்பி போல், இளவயது முதல் அந்தரங்க பக்தி செய்வதில் பிரியர். தெய்விகத் தன்மை வாய்ந்தவர். ஸ்வாமிகளின் கண்ணொளி யார் மேலாவது விழுந்துவிட்டால் அவர்களது சகல துயரமும் நீங்கி, மனம் தூய்மை பெற்றுவிடும். அவர்கள் திருமேனிக்குள் சதா பிரகாசித்துக் கொண்டிருந்த ஆன்ம ஜோதி அவர்கள் கண்களில் பளிச்சிடுவதை நாம் தரிசிக்கலாம். ஒவ்வொருவர் உள்ளும் பிரகாசிக்கும் அந்த ஆன்ம ஜோதியை சுவாமிகள் சதா அனுபவித்து ஆனந்தப்படுவது போல, எல்லோரும் உணர்ந்து பரவசப்படலாம் என்று அடிக்கடி சுவாமிகள் கூறுவது உண்டு. இவர் ஓர் அரிய சக்தி பொருந்தியவர். எல்லோ ராலும் அறியவொண்ணாத ஒரு தெய்விகப் புருஷர். மக்களிடம் உரையாடும் போதும் இவரின் கண்ணொளி மின்னொளி போல் விளங்கும். இவர் எப்பொழுதும் தன்னைத் தாழ்த்தியே பேசுவார். ஸ்வாமிகள் பெருமை வாய்ந்த தம் திருவாயைத் திறந்து, மனங்கனிந்து சிரித்தால் வெண்கல ஒலி போல 'கண கண' என ஒலிக்கும்.

ஸ்வாமிகளின் தகப்பனார் இராமசாமி அய்யங்கார் மனத்துயரத் துடன் தம் குறையைத் தெரிவித்த போது, "தக்க சமயத்தில் வந்து உதவுகிறேன்" எனச் சொன்னார். அவ்வாறே தகப்பனார் வைகுண்ட பதவியடையும் சமயம், எங்கேயோ சென்றிருந்தவர் வந்து, பிதுர்க் காரியத்தைக் கூட இருந்து நடத்தி வைத்தார்.

மகான்கள் போற்றிய மகான்

குமார ஸ்வாமிகள் மெலிந்த மேனி உடையவர். அவர் ஸ்பரிசம் பச்சிளங்குழந்தைகள் தொடுவது போன்று இருக்கும். வாழும் இடம் சிறு குடிசையாயினும் தெய்வ நிலை எங்கும் பரவி விளங்கும். சுவாமி பெருமை உணர்ந்து பல சுவாமிகள் இவரது குடிசைக்கு வருகை தந்தது உண்டு. சேந்தமங்கலம் அவதூத ஸ்வாமிகளின் சீடர் ஸ்ரீ துரியானந்தா, திருப்பதியில் வாழ்ந்த ஸ்ரீ காயத்திரி சுவாமிகள், திருக்கோவிலூர் ஞானானந்தா சுவாமிகள், நொச்சூர் சிவயோகி சித்தா னந்தா, பூதான பிதா ஸ்ரீ விநோபா பாவே முதலானோர் விஜயம் செய்து, சுவாமியுடன் சல்லாபித்து, சாந்தி வளர்த்துச் சென்றுள்ளனர். புதுவையில் வாழ்ந்த அரவிந்தர், திருவண்ணாமலையில் வாழ்ந்த பகவான் ரமண மஹரிஷி, திருவனந்தபுரம் அபேதானந்தா மகராஜ், புதுக்கோட்டை புவனேசுவரி பீடம் ஸ்ரீ சாந்தானந்தா, சீர்காழியில் வாழ்ந்த கதிர்காம சுவாமிகள், தற்பொழுது குமரகிரியில் இருக்கும் காசி ஸ்வாமிகள், சென்னை வீர சுப்பையா மடாலயம் சுவாமி வித்தியானந்தாகிரி, கிருபா னந்தவாரியார் அவர்கள், பித்துக்குளி முருகதாஸ் முதலானோர்களால் பாராட்டப்பட்டவர்.

ஒரு சமயம், ஒரு தனவந்தர் மதுரை திருமாலிருஞ்சோலை அழகர் சந்நிதியில் ஸ்வாமி சேவை செய்வதற்கு ஸ்வாமிகளை அழைத்துச்

Koviloor Digital Library

சென்று, ஸ்வாமி தரிசனம் செய்யும் போது கோயில அர்ச்சகர் கற்பூர ஆரத்தியைக் கொண்டுவந்து தனவந்தர்க்குக் கொடுக்க, அவர் சுவாமி களைக் காட்டி அவருக்குச் சாதிக்கச் சொன்னார். ஆனால் அர்ச்சகர் அவ்வாறு செய்யாது சற்று தயக்கம் காட்டினார். காரணம், ஸ்வாமிகள் பார்ப்பதற்குச் சாதாரண மனிதரைப் போன்று இருந்ததுதான். பின்பு, அர்ச்சகர் கோயில் மூர்த்தியிடம் சென்று திரும்பி வந்தார். அந்த அர்ச்சகர் யாருக்கும் அடிபணியாதவர். அத்தகையவர் சந்நிதியிலேயே எல்லோரும் பார்க்க ஸ்வாமிகளின் திருப்பாதங்களில் விழுந்து, "ஸ்வாமி, அபசாரம் செய்துவிட்டேன்" என்று வருந்தினார். ஸ்வாமி அவரை எழுப்பி, விவரம் யாது என விசாரிக்க, அர்ச்சகர் சொன்ன தாவது "ஸ்வாமி, அடியேன் தவறு செய்துவிட்டேன். மூலவரிடம் உள் சென்று வந்ததும், தேவரீரைப் பார்க்கும் போது சங்கு சக்கர கதாதாரி ஊர்த்வ புண்டரத்துடன் காட்சியளித்தீர்கள். ஸ்வாமி, இன்று சாபல்யமானேன். ஆசீர்வதித்து அநுக்ரஹிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டு, உள்ளே சென்று, புஷ்பஹாரம், பரிவட்டம் முதலான வற்றைச் சமர்ப்பித்து, அடி வணங்கி நின்றார். ஸ்வாமிகளது ஜோதி உள்ளத்தை உண்மை பக்தர்கள் பார்த்திருக்கிறார்கள்.

சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆத்ம பரிபூர்ண கடாக்ஷத்தை யோக நிலையில் அறிந்து ஆசி பெற்றவர். ஸ்வாமிகள் வசித்த ஆசிரமம் ஒரு பெரிய தபோவனமா ? ஏழடுக்கு மாடி வீடா ? இல்லை. ஸ்ரீ காளத்தி நாதர் சந்நிதியில் ஓர் ஒதுக்குப்புறம். ஸ்வாமிக்கு எதற்கு தபோவனமும், மச்சு வீடும் ? ஸ்வாமிகள்தான் எட்டடுக்கு மாடி மேலமர்ந்தவராயிற்றே ! ஒரு சிறு வைக்கோல் வேய்ந்த குடிசை. இதன் அழகு மனத்தைக் கவரும்; வீசும் வாசனையும் ஜோதிப் பிரகாசமும் நிறைந்தது. சதா காலமும் தரிசிக்க பக்தர்கள் வந்து போவார்கள். உண்மை பக்தர்களுக்கு உடனே தரிசனம் கிடைக்கும். சாதாரணமானவர்களுக்கும், 'பார்த்து விட்டுத்தான் போகலாமே' என வரும் வெளி வேஷக்காரர்களுக்கும், அவரவர்களின எண்ணங்களுக்கேற்றபடி தரிசனக் காட்சியும் கிடைக்கும்.

ஒரு பக்தர் தொலைவிலிருந்து ஸ்வாமிகளைக் காணும் பொருட்டு வந்தார். அப்பொழுது சுவாமிகள் பெருமாள் சந்நிதியின் முன்புறமுள்ள அரசமரத்தின் அடியில் உட்கார்ந்து, தந்த சுத்தி செய்துகொண்டு இருந் தார்கள். சுவாமிகள் சாதாரண தூய கதர் வெள்ளை ஆடை அணிந்தவர். பார்ப்பவர்களுக்கு, 'இவர்தான் மஹான்' எனத் தெரிந்துகொள்ளாத படி அடக்கமாய்ப் பழகுபவர். அதனால் வந்தவருக்கு இவர்தான் ஸ்வாமி யெனத் தெரியவில்லை. ஸ்வாமி எங்கு இருக்கிறார் எனச் சுவாமிகளைப் பார்த்துக் கேட்டார். அதற்கு, "ஏன் சாமியாரைத் தேடுகிறாய் ? அவரால் என்ன ஆக வேண்டும்?" என்று கேட்க, வந்தவர், "பார்க்கலாம் என்று ஓர் எண்ணம்; அதனால் கேட்டேன்," என, "இவ்விடம் வருவார், பார்த்துப் போகலாம்" எனச் சொல்லி, பல உலகப் பேச்சுகளைப் பேசி விட்டு, உணவு அருந்த நேரமாகிவிட்டது எனச் சொல்லும் போது, அங்குள்ள பெருமாள் சந்நிதி அர்ச்சகர் நைவேத்யம் செய்த அன்னத்தை வந்தவர்க்குக் கொடுக்கும்படி சொல்லிச் சென்று விட்டார்; மாலை வரையில் வந்தவர் காத்திருந்து, மறுபடியும், வந்து, "ஸ்வாமி எங்கே ? இன்னமும் காணோமே" என்று கேட்க, "எதற்காக இவ்வளவு ஆவலுடன் தேடுகிறாய் ?" என, வந்தவர், "அவரைப் பார்க்க வேண்டுமென்று ஆவலாய் வந்தேன்; இயலவில்லையே" என ஏங்கினார்.

Koviloor Digital Library

உடனே ஸ்வாமிகள், "உன் முன் நிற்பவர்தான் நீ தேடும சாமியார்" என்றார். வந்தவருக்கு ஒன்றுமே புரியவில்லை. மனம் பீதி அடைந்து, வாய் திறந்து பேச முடியாதவராய்த் திகைத்து, அப்படியே நின்ற நிலையில் நின்றுவிட்டார். சில நாழிகைக்குப் பின் தெளிவடைந்து, வணங்கிச் சென்றுவிட்டார். இது போல், பல பேர்கள் வந்து. தரிசித்தும் தரிசியாதவர்களும் உண்டு.

கடைசியில், வெகு காலம் அகிலாண்டம்மாள், அருணாசலம் பிள்ளை அவர்களும் உபசரித்து வந்தார்கள். ஸ்வாமிகளுக்கு வடகுமரையில் மாணவர்கள் படிக்கும் பள்ளி ஒன்று நிறுவ வேண்டுமென அந்தரங் கத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அந்த எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள வைகுந்தம் அன்பர் உள்ளத்தில் அதே எண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்து, அன்பரைக் கருவியாகக்கொண்டு, சர்க்கார் திட்டத்தின்கீழ் சுவாமியின் பேரில் உள்ள நிலத்தை உபயமாக எழுதிக் கொடுத்து, பள்ளி நிறுவனம் செய்யப்பட்டு, பூஜ்யர் விநோபாஜியால் பள்ளித்திறப்பு விழா நடந்தது. ஆண்-பெண் குழந்தைகளுக்குப் புதிய சீருடை தைத்துக் கொடுத்தார்கள். அதுமுதல் இன்று வரையில் பள்ளி நல்ல முறையில் நடந்து வருகிறது.

பெருமாள் கோயில், ஈஸ்வரன் கோயில் நல்ல முறையில் ஜீர்ணோத் தாரணம் செய்து, கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். காளத்தி நாதர் சந்நிதிக்கும் பெருமாள் சந்நிதிக்கும் மத்தியில் குடிநீர்க் கிணறு ஒன்று வெட்டப்பட்டது. அரசமரத்தடியில் ஆஞ்சநேயர் விக்ரஹம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. வடகுமரை கிராமத்திற்கு லக்ஷ்மி கடாக்ஷம் பெறும் வகையில் ஏற்பட்டது. ஸ்வாமிகள் அடிக்கடி அடியே னுடைய கிராமத்திற்கு வந்துகொண்டு இருந்தார்கள். அடியேனுக்கு உற்ற நண்பராக விளங்கியவர் இல்லத்திற்கு வருவார்கள். அவர்கள் அங்கிருந்து என்னைப் பார்ப்பதற்கு வருவதோடு சரி. எத்தனையோ தடவை நண்பர் அவர்கள், "அவர் பெரிய மஹான், வந்து பாருங்கள்" என்பார். "அது நீங்கள் சொல்லி வராது. அவர்களைப்பற்றி உள்ளத் தில் தெரிய வேண்டும். அப்புறம் பார்த்தால்தான் நல்ல நிகழ்ச்சிகள் ஏற்படும்! விலகாது" என்று அடியேன் சொல்வேன். இப்படி இரண்டு ஆண்டுகள் கழிந்தன. சரியாக ஞாபகத்திலில்லை. எழுதி வைத்த நாட்குறிப்பு கைதவறிவிட்டது.

1952, அல்லது 1953 இருக்கலாம். ஜனவரி கடைசியில் ஒரு நாள் பகல் ஒரு மணிக்கு அவர்களைப் பார்க்க வேண்டுமெனத் தோன்றியது. சுவாமியைப் பார்க்க வேண்டும் என நண்பரிடம் கூறினேன். அவர் அதற்கு, இந்தச் சமயம் ஊரில் இருக்க மாட்டார்கள். கடிதம் எழுதிப் போவது நல்லது. இங்கும் அறுப்பு நடப்பதால் பிறகு போகலாம்" என்றார். 'இல்லை, இன்றுதான் போக வேண்டும். சுவாமிகள் ஊரில் இருப்பார்கள். அதில் சந்தேகமில்லை ; உடனே புறப்படுங்கள். இந்த அறுப்பு போனால் பரவாயில்லை. நாம் சம்பாதிக்க வேண்டிய அறுப்பு சுவாமிகள் கருணை தான்" என்றேன். ஊரில் யார்க்குமே அடியேனிடம் ஒருவித வாஞ்சை உண்டு. எதையும் உறுதியாகச் சொல்வார், நடப்பார் என்று. அதனால் நண்பர் உடனே புறப்பட்டுவிட்டார். இரு வரும் சிதம்பரத்தில் இருந்து புறப்பட்டு, விருத்தாசலம் வந்து, இரயில் ஏறினோம். சுவாமிகள் என்ன செய்கிறார்கள் என்றால், "இரண்டு பையன்கள் வருகிறார்கள் ; சாப்பாடு தயார் செய்துகொண்டு வரவும்"

Koviloor Digital Library

"எனச் சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் ரயிலைவிட்டுச் சார்வாய் ஸ்டேஷனில் இறங்கி, வடகுமரை வந்து சேர்ந்தோம். 9 மணிக்குச் சுவாமிகள் சிவன் கோயில் மண்டபத்தில் நந்தியின் முன்புறம் லைட் வைத்துக்கொண்டு, பாய் விரித்து உட்கார்ந்திருந்தார்கள். வெற்றிலை போட்டுக்கொண்டு இருந்தார்கள். "வாருங்கள்" என்றார்கள். நமஸ்காரம் செய்தோம். விருந்தினர் வருவார்கள் என்று தெரிந்து நடந்தது மாதிரியாக இருந்தது. ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. உணவுண்டு, பால் அருந்திவிட்டுப் படுத்துவிட்டோம். எப்பொழுதும் போல் அடியேன் காலையில் ஸ்நானம் செய்து, ஜெபம் தியானம் செய்து, உட்கார்ந்து இருந்தேன். சுவாமிகள் வந்தார்கள். "ஓஹோ! எல்லாம்முடிந்துவிட்டதா?" என்றார்கள். "ஆம் சுவாமி" என்றேன் "நிரம்பவும் நல்லது" என்றார்கள். சிற்றுண்டி வந்தது. சாப்பிட்டோம். பேச்சு ஒன்றுமில்லை. 10-00 மணிக்குப் பலகாரம், பிஸ்கட் கொடுத்தார்கள். 1 - 30 மணிக்குச் சாப்பிட்டோம். சுவையான சாப்பாடு. பிறகு ஊருக்குக் கிளம்பினோம். பின் தைப்பூசத்திற்குப் போனோம். அதைப் பற்றிச் சொல்லி முடியாது. அந்த அளவில் பெரும் திட்டமாக நடந்தது. எங்கிருந்து சாமான்கள் வருகின்றனவோ தெரியாது. வந்துகொண்டே இருக்கும். 1500 பேருக்குச் சாப்பாடு நடந்தது. பலவீடுகளில் ஏற்பாடு செய்திருந்தார்கள். பஜனை உபன்யாசம் யாவும் நடந்தது. பார்க்கப் பார்க்க ஆனந்தமாய் இருந்தது. ஸ்ரீசுப்ரமணியருக்கு அபிஷேகம் விமரிசையாக நடந்தது. சுவாமிகள் இருக்கும் இடமே தெரியாது. ஆனால், எல்லாம் சரியாக நடந்தது. அதுதான் கலைஎன்றும் சொல்லலாம். ஆச்சரியம் என்றும் சொல்லலாம். அவர்கள் காட்டுகிற அன்பையும், பணிவையும், உபசரிப்பையும் வேறு எவரிடமும் காண இயலாது. அதற்கு அவர்களேதான் ஈடு. வீட்டில் தாய்மார்கள்கூட அப்படி உபசரிக்கமாட்டார்கள். அப்படிச் செய்வார்கள். பார்ப்பதில் நமக்கு ஓர் ஆனந்தம் ஏற்படும். நமக்கு சாந்தி உண்டாகும். மனத்தில் உள்ள கேடுகள் யாவும் நீங்கும். அப்படித் தெவிட்டாத இன்பமாக யாவருடைய உள்ளத்திலும் வாழ்ந்தார்கள். இப்பொழுதும் அவர்கள் நினைவாகவே இருப்பவர்கள். உள்ளத்தில் வாழ்ந்து வருகிறார்கள். யாவர்க்கும் அருவுருவமாக இருந்து அவ்வப்பொழுது வேண்டியதை அருள்கிறார்கள். இவை நிதர்சனமாகக் கண்ட உண்மைகள்.

பூச விழா நடந்த இரவு, தேசிகன் கந்தர் அனுபூதி பாடிக்கொண்டிருந்தார். அந்தச் சமயம் சார்வாய் அய்யங்கார் அவர்கள் வந்து, சில வார்த்தைகள் சுவாமியிடம் கடிந்து பேசினார்கள். அவர் பேசியது யாவருக்கும் வருத்தத்தை அளித்தது. உடனே சுவாமி அவர்கள், "இன்றோடு பூசத்திற்கும் அனுபூதி பாடி ஆகிவிட்டது" என்று சொன்னார்கள். இனி பூசம் நடத்துவதில்லை என முடிவு செய்துவிட்டதாகச் சொன்னார்கள். மறுவருஷம் லெக்ஷமிகுடி அன்பர்கள் பலர் வந்து, சிவன் இராத்திரியில் அகண்டநாம (சிவாயநம) பஜனை நடத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி ஆறு வருஷம் லெக்ஷமிகுடியில் ஞானகிராமப்பிள்ளையும் பல அன்பர்களும் கூடி, சிவன் இராத்திரி வைபவத்தை நல்ல முறையில் நடத்தினர். நல்ல சங்கீத விற்பன்னர்களைக்கொண்டு வருஷா வருஷம் விழா விமரிசையாக நடத்தப் பெற்றது. ஒரு வருஷம் ஆணையாம்பட்டி சுப்பையர் அவர்கள் ஜலதரங்க வாத்தியம் வாசித்தார்கள். 1961-ஆம் வருஷம் சிவன் இராத்திரியில் நொச்சூர் ஸ்ரீ சிவயோகி சித்தானந்த சுவாமிஜி அவர்களும் வெள்ளை

Koviloor Digital Library

பாணலிங்கத்துடன் வந்திருந்தார்கள். அன்று சிறப்பாக அபிஷேக பூசைகள் நடந்தன. வருஷா வருஷம் சிவன் இராத்திரி விழா நடந்தது. அங்கு அக்கம்பக்கமுள்ள கிராமவாசிகளுக்கு உற்சாகமாக இருந்தது. பல பேரும் பங்குகொண்டு சிறப்புற நடத்தினர்கள். வருஷாவருஷம் சுவாமிகள் வந்து, கலந்துகொண்டு பக்தர்களுக்கு ஆசி உரை வழங்கி வந்தார்கள்.

உலகை உய்விக்க வந்த மஹான்கள் மக்களை மேல்நிலைக்குக் கொண்டுவர, முக்கியமாக மூன்று வழிகளைக் கையாளுகின்றனர். எண்ணத்தாலும், ஸ்பரிஸத்தாலும், திருஷ்டியாலும், தங்கள் அருளை மனத்தின் பரிபக்குவத்திற்கேற்ப, அள்ளிச் சொரிவதுண்டு. இந்த மூன்று முறைகளையுமே கையாண்டு தம்மை அணுகியவர்களை மேல் நிலைக்குக் கொண்டுவரப் பாடுபட்டவர், நம் அப்பண்ணு சுவாமிகள். எண்ணற்ற மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒருவர், தம் முயற்சி ஏதும் இன்றித் தெய்விக உணர்வில் மிக்க நாட்டம் கொண்டு அழுது புலம்புவதும் உண்டு. இந்த உணர்ச்சியை அனுபவித்த ஒருவர், பல நாட்களுக்குப்பின் சுவாமிகளை நேரில் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்றபோது, தமக்கு அந்த உணர்வு ஏற்பட்ட அதே நிமிஷத்தில் சுவாமிகள் தம்மை நினைத்ததுதான் காரணம் என்பதைப் புரிந்துகொண்டார். மற்றும் சிலரை அணைத்து, தழுவி, உச்சி முகந்து, முகவாய்க் கட்டையைத் தடவிக்கொடுத்து, 'கண்ணு, சுகமா?' எனக் கேட்பதும் உண்டு. ஸ்பரிஸத்தால் உணர்வு ஊட்டும் முறை இது. கன்றுக்குட்டி தன் தாய் மடிப்பாலை சுரந்து ஊட்டுவது போன்ற இனிமையான உணர்வு, இதனுல் ஏற்பட்டது பல அன்பர்களுக்கு. சுவாமிகளை நேருக்கு நேர் தரிசிக்கும் போது சிலரிடம் பேசுவதில்லை. அருள் வழிய, தமது திருக்கண் நோக்கினுலேயே மோன நிலையில் நெஞ்சோடு நெஞ்சாக, நயனங்கள் மூலமாகத் திருவருள் பாலிப்பார்கள். மோனம் என்பது ஞானத்தின் வரம்பு. அவர்களிடம் தாயின் அன்பைக் கண்டோம். யாவரும் தம்மிடத்தில்தான் ஸ்வாமிக்கு அதிக அன்பு என எண்ணுவார்கள். ஆனுல், அவர்கள் தனவந்தர்களிடத்திலும், பாமரனிடத்திலும் சமமாக நீங்கா நினைவில் பதிந்துவிட்டார்கள். நாம் ஒன்று கேட்க வேண்டும் என எண்ணிப் போவோம். ஆனுல், அங்கு நடப்பதே விந்தையாக இருக்கும். 10, 15 பேரோடு பேசிக்கொண்டு இருப்பார்கள். வந்தவர்கள் கேட்க வேண்டும் என எண்ணி வந்ததற்கு விடை சுவாமிகள் சம்பாஷணையிலேயே தாமே வந்துவிடும். அதனுல் கேள்வி கேட்ப தற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரை நாம் பார்த்தது இல்லை. அவர் வரலாற்றைப் படித்து இருக்கிறோம். அவ்வரலாற்றில் தெளிந்த உண்மைகளை நிதர்சனமாக ஸ்ரீமத் அப்பண்ணு சுவாமிகளின் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவர்கள் பலருளர்.

சுவாமிகள் அபிராமியின் அருள் பெற்று தரிசித்தவர்கள். அந்தாதி கேட்க வேண்டுமானுல் அவர்களிடந்தான் கேட்க வேண்டும். இசையிலும் இயற்கையிலும் மெய் மறந்து சமாதி நிலை கிட்டிவிடும். இயற்கையை நன்ருக அனுபவிப்பார்கள். குழந்தை உள்ளம் படைத்தவர்கள். நடை உடை பாவனையில் யாவருமே மஹான் என்று தெரிந்து கொள்ள முடியாது. 'பாம்பின் கால் பாம்பறியும்' என்றபடி அருள் நாட்ட முள்ள மெய்யன்பர்கள் சுவாமிகளை ஓரளவு புரிந்துகொண்டனர்.

Koviloor Digital Library

அவர்களுடைய மகிமையைச் சில பேரே கண்டறிந்தார்கள். அவர்களுடைய வரலாறு எழுத நமக்குச் சக்தி இல்லை. அந்தச் சக்தியை அவர்களே கொடுத்து, முன்னின்று, அருள் செய்து, வாழ்க்கை வரலாறு வரத் துணை புரிய வேண்டும். அவர்கள் தாம்பூலம், புகையிலை போடுவதைப் பார்த்தால், 'இவர்கள் சந்நியாசிதானா?' என்ற சந்தேகம் எழும். அதற்குத் தகுந்தாற்போல் வெண்மை உடை, மாதம் ஒரு மொட்டை, சில சந்தர்ப்பங்களில் ஆறு மாதங்கள்கூட ஆகும். பார்க்கப் பார்க்க அவர்கள் கண் ஒளி வீசும். விளக்குப் போலச் சுடர் விட்ட அவர்களுடைய கண்கள் இரண்டையும் கண்டு சொக்கிப் போனவர் பலர். அப்படி ஒளிவிடும் கண்களை வேறு இடங்களிலே பார்ப்பது மிகமிக அரிது. அவர்கள் நிஷ்டாநுபூதியில் நிறைந்தவராக இருந்ததனால் அந்தக் கண்கள் அந்த நிறைவைக் காட்டிக்கொண்டிருந்தன.

நாம் அதிகத் துயரத்தால் கஷ்டப்படுவதைக் காணச் சகிக்க மாட்டார்கள். இப்பொழுது நமக்குக் கஷ்டம் ஏற்பட்டால் உள் பாவத்தோடு நினைத்தால் உடனே யாவும் 'பகலவனைக் கண்ட பனி போன்று' அகலும். அவர்கட்கு, 'ஆசிரமம் ஏற்படுத்த வேண்டும்; ஆசிரமத்திற்குச் நிறைய பொருள் சேர்க்க வேண்டும்; பல பேர்க்குக் குருவாக விளங்க வேண்டும்' என்ற மனப்போக்கு கிடையாது. அவர்களுடைய வாழ்க்கை வழியே தனி. சிறிய குடிசையில் வாழ்ந்து வந்தார்கள். தம்மைக் குருவாகப் பாவித்து யாரிடமும் நடந்துகொண்டதே கிடையாது. உபதேசமோ, ஜெபமோ, மாந்திரிகமோ, தாந்திரிகமோ யார்க்கும் செய்தது கிடையாது.

துறவுக் கோலம்

அவர்கள் துறவுக் கோலம் பூணவில்லை; தம்மைச் சுவாமிகள் என்று கூறிக்கொள்ளவில்லை. தம்மை யாரும் வணங்க வேண்டும் என்று விரும்பவில்லை. புகழாசை எள்ளளவும் அவரிடம் இல்லை. ஆனால், அவர்களிடம் நிறைந்திருந்த அனுபவம் பெரிது. அவர்கள் எதுவும் செய்யத் தேவையில்லை. அவர்கள் தரிசனம் கிடைத்தாலே பெரிய பாக்கியம். அவர்கள் தரிசனம் கிடைத்து, நம்மோடு பேசி, ஆசிர்வாதம் சொன்னாலே நமக்குப் பெரிய பாக்கியம். அவர்கள் சொல்வது யாவும் அப்படியே நடக்கும். எல்லோரிடமும் குழந்தை போல் பழகும் இயல்புடையவர்கள், சுவாமிகள். 'உலகத்தில் உள்ள பல திற மக்களும் அவர்களை அண்டினார்கள். ஏழைகள் வருவார்கள்; பணக்காரர்கள் வருவார்கள்; தொழிலாளி வருவான்; ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் வருவார்; பண்டிதர் வருவார்; பாமரன் வருவான்; கிழவி வருவாள்; குமரி வருவாள்; குழந்தை வருவான்; அவன் தாத்தா வருவார்; குடும்பி வருவான்; உலகில் பெரிய சாமியார் என்று புகழ் பெற்றவரும் வருவார். யாவரிடமும் இன்சொல்லுடனும் அன்புடனும் பழகி, அவர்களுக்கு இங்கிதமான வார்த்தைகளைக் கூறும் சால்புடையவர்கள். எவரையும் மனம் புண்படப் பேசத் தெரியாதவர்கள். தாம் ஏதோ பெரிய நிலையை அடைந்தவர் போலவும், மற்றவர்கள் தாழ்ந்தவர் போலவும் எண்ணிப் பிறருக்கு உபதேசம் செய்யும் இயல்பு இன்று பலரிடம் இருக்கிறது. சுவாமிகள், சாதுக்கள், சந்நியாசிகள் என்பவர்களிடம்தான் அது அதிகமாக இருக்கிறது. ஆனால் அப்பண்ண சுவாமிகள் அப்படிச் செய்கிற

Koviloor Digital Library

தில்லை. அவரவர்களைக கண்டு பாராட்டுவார்கள். அந்தப் பாராட்டே அவர்களை மேன்மேலும் உயர்த்திவிடும்.

1959 - இல் நம் சுவாமிகளும் நொச்சூர் ஸ்வாமிகளும் வெள்ளை சிவலிங்கத்திற்கு சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் சாதுக்கள் மடத்திற்கு அபிஷேகத்திற்கு வரப்போகிறுர்கள் எனத் தெரிந்து, அடியேன் அங்கு போனேன். நம் ஸ்வாமி அடியேனைப் பார்த்து நொச்சூர் ஸ்வாமியிடம், "இவர் ஒரு நல்ல பக்தர்" எனக் கூறி, "இவர்களை நான்கு வருஷமாகப் பார்க்க முடியவில்லை" எனக் கூறினுர்கள். அன்று நொச்சூர் சாமியின் பாடலைக் கேட்டு அடியேன் மெய்மறந்து போனேன். நம் ஸ்வாமிகள் அகஸ்தியரின் பாடலை நொச்சூர் ஸ்வாமிகள் பல இடங்களில் பாடும் போது கேட்டுச் சமாதி அனுபவத்தில் நிஷ்டை கூடுவார்கள். நம் ஸ்வாமிகள் அகஸ்தியர் பாடலைப் பாடுவதும், அன்பர்களைப் பாடச் சொல்லிக் கேட்பதும் வழக்கமாயிருந்தன.

யார் அவர்களுடன் பழகினுலும் அவருடைய நலந்தீங்குகளை விசாரித்து, அவர்களுடைய குடும்பத்தில் ஒருவரைப் போலே பழகும் இயல்பு அவர்களிடம் இருந்தது. தனக்கென்று ஒன்றும் இல்லாத கண்ணுடியில் அவரவர்கள் முகம் தோற்றுவது போல, பற்றற்ற அவர் களிடம எல்லோர் மீதும் அன்பு தோன்றியது. ஜீவகாருண்யமே வடிவமானவர்கள் அவர்கள்.

குமரைப் பெருமானைப் பார்த்தால் (ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள்) ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரை பார்க்க வேண்டியதில்லை.

> **"வங்கத்து மாகாளி மைந்தன் பரமஹம்ஸன்**
> **இங்கவன்போல் வாழ்ந்தான் இணையில்லான் - துங்க**
> **வடகுமரை அப்பண்ண மாதவனே நாங்கள்**
> **தொடர வழிகாட்டும் துணை"**

நடை, உடை, பாவனை யாவும் அப்படியே. சகஜ சமாதி அடிக்கடி கூடும். சங்கீதத்தையும் இயற்கையையும் அனுபவித்து சமாதி நிலை கிட்டிவிடும். "என்னைப் பார்த்தால் இராமகிருஷ்ணர் மாதிரி இருக்கிறதல்லவா?" என்று அன்பர்களிடம் விளையாட்டாகக் கேட் பார்கள். அன்பர்களை உபசரிக்கும் முறையை அவர்களிடந்தான் கற்றுக்கொள்ள வேண்டும். சித்து விளையாடி இருக்கிறுர்கள். மனுேதிடத்துடன் சரியாக மனத்தை அடக்குங்கால் சித்து வருகிறது. ஆனுல், அதில் விளையாடி ஏமாந்துவிடக்கூடாது. சித்து என்பது முதல் வகுப்புக்குச் சமானம். நாம் அடுத்தடுத்து மேல் படிப்புக்குப் போக வேண்டியிருக்கும் போது முதல் வகுப்பிலேயே இருப்பதில் என்ன பிரயோசனம? விளையாட்டிலேயே நோக்கம் கொண்டால் அது நம்மைச் சுழற்றிக் கீழே தள்ளிவிடும். 'தான்' என்னும் அகம்பாவம் உண்டாகும். தான் ஒரு பெரிய ஞானி என கருவம் வரும். அவசியம் நேரும் பொழுது அவர்களையும் மீறி தெய்வசம்மதமாகச் சில சித்துகள் வெளிப்படுகின்றன. "தாயே, எனக்குச் சித்துகள் வேண்டாம். மேல்நிலையில் கொண்டு போய் உண்மை நிலையில் நிற்க ஆசீர்வதி, அம்மா!" எனப் பிரார்த்திக்க

Koviloor Digital Library

வேண்டும். சுவாமி அவர்களிடம் அற்புதச் சக்திகள் இருப்பது யார்க்கும் தெரியாது. அணிமா சித்துகள் கைவரப் பெற்ற சித்த புருஷர். உதாரணமாக, ஒரே நாளில் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று நண்பர்களுக்குத் தரிசனம் கொடுத்திருக்கிறார்கள். அப்பொழுது அருளுரையும் வழங்கியுள்ளார்கள். சில சமயம் அவர்கள் இருக்கும் இடத்திலும் நறுமணம் வீசும். ஒருவர் நோயுற்றிருக்கச் சகிக்க மாட்டார்கள். அவர்களையே சரணாகதி அடைந்தவர்களின் பிணியைத் தீர்த்திருக்கிறார்கள். இது போல் பல அனுபவம் பல அன்பர்கள் பார்த்திருக்கிறார்கள். சீர்காழியிலிருந்த கதிர்காம சாமியை இரண்டு மூன்று தடவைகள் சென்று பார்த்திருக்கிறார்கள். பட்சணம், பழம் வாங்கிப் போவார்கள். அவர்கள் வாயில் சாமி போடுவார்கள். இருவரும் இப்படிப் பரிமாறிக்கொள்ளும் அந்தக் காட்சி அற்புதமாயிருக்கும். கதிர்காமசாமி பேசுவது, புரிவது கஷ்டம். அவ்வளவு வயது ஆனவர். ஆனால், அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து நடந்தார்கள். கதிர்காமசாமி கிருஷ்ண விக்ரகம் கேட்டார்கள். அதை விடா முயற்சியாகத் திருமுருகன் பூண்டியில் செய்து, கொண்டுபோய்க் கொடுத்தார்கள். யார் எதை நினைத்தாலும் விரும்பினாலும் அதை நிறைவேற்றித் தருவார்கள். நம் சுவாமிகள் திருக்கோவிலூர் வரச் சொல்லியிருந்தார்கள். போன போது வக்கீல் சுப்ரமணிய அய்யர் வீட்டில் தங்கி இருந்தார்கள். சத் விஷயங்கள் பேசினார்கள். ஒரு நாள் ஞானானந்த சுவாமிகளைப் பார்க்க வக்கீலோடு போனோம். ஞானானந்த சுவாமிகளுக்கும் நம் சுவாமிகளுக்கும் நல்ல தொடர்பு உண்டு. ஞானானந்த சுவாமிகளைப் பார்த்து நம் சுவாமி பேசிக்கொண்டிருந்த போது, அடியேனைப் பற்றி ஞானானந்த சுவாமிகள் யாரென விசாரித்தார்கள். அதற்கு நம் சுவாமி, "நல்ல பக்தர், அவர் இங்கு தங்க இடம் வேண்டும்" என்றார்கள். ஞானானந்த சுவாமிகள் வந்து, தங்குவதற்கு ரூம்கள் காட்டி நாள் பார்த்துச் சொல்லிவிட்டார்கள். மறுநாள் அடியேன் சுவாமியிடம் விடை பெற்றுக்கொண்டு வைத்தீஸ்வரன் கோவிலுக்குப் போய்விட்டேன். குமரைக்குச் சுவாமிகளுக்கு அடியேன் கடிதம் எழுதினேன். தற்சமயம் தபோவனம் போக மனம் இடம் தரவில்லை. தங்களுடன் குமரையில் தங்க வேண்டுமென ஆவல் அதிகமுள்ளதெனக் கடிதம் எழுதினேன். அதற்குச் சுவாமிகள் எழுதிய கடிதத்தில், "தாங்கள் வைத்தீஸ்வரன் கோயிலில் குடிசையைத் தயார் செய்யுங்கள்; அடிக்கடி அங்கு வந்து தங்குகிறேன்" எனக் கடிதம் வந்தது. அதன்படி குடிசை வெகு சீக்கிரம் தயார் செய்து, ஸ்வாமிகளும் உடன்வந்து மூன்று நாள் தங்கியிருந்தார்கள். அதன்படி இரண்டு தடவை வந்திருந்தார்கள். அடியேன் சுவாமி சொல்கிறபடி உறுதியாக இருக்கிறேனா எனப் பல தடவைகள் சோதனை செய்திருக்கிறார்கள். கடைசியில் சொன்னதாவது: "காலம் வரும், நீ குமரை வந்து தங்கலாம்," என்றார்கள். மறுபடியும் 10-3-62-இல் வைத்தீஸ்வரன் கோயில் வந்தார்கள். இரண்டு நாள் தங்கினார்கள். பிறகு, இருவருமாகத் திருவானைக்காவல், கோயம்புத்தூர், கோபிச்செட்டிப்பாளையம் முதலான இடங்கள் போய்விட்டு ஈரோடு வந்து A. சேஷய்யர் வக்கீல் வீட்டில் இரண்டு நாள் தங்கினோம். அந்தச் சமயம் கி. வா. ஜ. - வும் வந்து சுவாமிகளுடன் தங்கியிருந்தார்கள். அடியேன் சுவாமியிடம், "காசியில் போய் தங்கிவிடுவதென எண்ணுகிறேன்" என்று சொன்னேன். அதற்கு சுவாமிகள், "என்னை

Koviloor Digital Library
விட்டுவிட்டுக் காசிக்குப் போகிறுனும், காசிக்கு." என்று சொன்னுர்கள். "வாருங்கள், போகலாம்" என்று அடியேன் சொன்னேன். கி. வா. ஜ. வும் சேஷய்யரும் உடன் இருந்தார்கள். "ஒரு இடமும் போக வேண்டாம். அடியேன் இருக்குமிடந்தான் காசி. அதை நினைந்து மனத்தை அலைய விடாமல் இருங்கள்" என்ருர். கி. வா. ஜ, "நாம் யாவரும் தீபாவளி சமயம் காசிக்குப் போகலாம்!" எனச் சுவாமியிடம் சொன்னுர்கள். அந்தச் சமயம் நூல் வியாபாரம் இரத்தனம் பிள்ளை அவர்கள் வந்தார்கள். அவர்களிடம் அடியேனுடைய ஜாதகத்தைப் பார்க்கச் சொன்னுர்கள். அதற்கு இரத்தினம் பிள்ளை, "தங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது ?" எனச் சொன்னுர்கள். அவருடைய ஜாதகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னுர் கள். உடனே ஜாதகத்தைப் பார்த்து, "நிரம்பவும் நல்ல ஜாதகம், நல்ல நிலைக்குப் போகும்" என்ருர்கள். மறுநாள் காலையில் கிளம்பி இருவருமாகச் சேலம் வந்து **யுவராஜ்சிங்** வீட்டில் தங்கினேம். சாப்பிட்டு அடியேன் ஊருக்குப் புறப்பட்டேன். அப்போது சுவாமி சொன்னுர்கள், 'வர வர மார்வலி தாங்க முடியவில்லை. அதிக நாள் இருக்காது" என்ருர்கள். "ஏன் ஸ்வாமி அப்படிச் சொல்கிறீர்கள்? அப்படி ஒன்றும் ஆகாது" என அடியேன் சொன்னேன் "நீ என் பேரில் உள்ள பாசத்தால் சொல்கிருய். என் உடல் நிலை எனக்குத் தெரியும்" என்ருர்கள். அப்போதும் அடியேன் 3, 4 வருஷம் ஒன்றும் இருக்காது என எண்ணினேன். பேசிக்கொண்டிருந்துவிட்டு அடியேன் விடைபெற்றேன். பிறகு 3 மாதம் கடிதத் தொடர்பு இல்லை. 25-6-62-இல் ஒரு கடிதமும் அதற்கு முன் ஒரு கடிதமும் வந்தது. 25-க்கு முன் எழுதிய கடிதத்திற்கு அடியேன் பதில் எழுதினேன். அதற்காக 25-6-62இல் எழுதிய கடிதத்தின் வாசகம்:

என் இருதயம் மிகவும் பலஹீனமாயுள்ளது. மூச்சே சிற்சில சமயம் திணறித் தேங்குகிறது. எல்லாம் ஆண்டவன் அருளாடலே. உங்கள் வசதியுக்தபடி அம்பிகை கருணைக்கு இணங்கி நீங்கள் எங்குமே திருவருள் விலாஸத்தில் வாழ்வீர்கள். இது பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆண்டவன் எல்லா நலத்தையும் எப்போதும் வழங்குவார்.

பூர்வ புண்ணிய வசத்தால் பாரமார்த்திகப் பெருவாழ்வு வாழ எண்ணங்கொண்ட அன்பர்களுக்கு அவரவர்கள் பக்குவத்திற்கிணங்க எல்லா வகைகளிலும் நம் சுவாமிகள் துணை புரிந்தார்கள். தாம் விரைவில் உடலைக் களையப் போவதை முன்கூட்டியே உணர்ந்திருந் தார்கள். தம்மிடம் நெருங்கிப் பழகியவர்கள் தமது சரீரம் விழுந்தபின் ஸ்தம்பிக்கக் கூடாது; வேறு தக்க பெரியார்களைத் துணை கொண்டு சத் விஷயங்களை உணர்ந்து, உய்வு பெற வேண்டும்; கொழுகொம் பின்றித் தவிக்கக் கூடாது என்பதை மிகவும் கருத்தில் கொண்டிருந் தார்கள் என்பது புரிகிறது. இதற்கு உதாரணமாக, தமது உடற் சிறையை உதறித் தள்ளுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, வைகுந்தம் அன்பர் ரத்னம் என்பவருக்குச் சுவாமிகள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

ஸ்ரீதத்தாத்ரேயர் பரம்பரையைச் சேர்ந்த சேந்தமங்கலம் ஸ்ரீ சுயம் பிரகாச ப்ரம்மேந்திர சுவாமிகள் அவர்களின் சிஷ்யர் ஸ்ரீ நிஜானந்த ப்ரம்மேந்திர சரஸ்வதி சுவாமிகள் என்கிற யோகப் பட்டப் பெயருள்ள

Koviloor Digital Library

காசி சுவாமிகளை அண்டிப் பயனடையும்படி கருத்தாழத்தோடு எழுதி உள்ளார்கள். "சௌகர்யப்பட்ட போது, மீண்டும் இரண்டொரு தினத்தில் சேலம் செல்லும் போது ரமணி சர்வீஸ் செட்டியாரவர்கள் இல்லம் சென்று, அருட்பெரியார் காசி சுவாமிகளைப் புனித முறைப்படி வணங்கி, அமைதியாக முன்னின்று, அமர்ந்து ஆசி பெறுங்கள். சாத்துக்குடி, ஆப்பிள், பிஸ்கட் வாங்கிச் சென்று அர்ப்பணியுங்கள். நல்ல மணமான வத்தியும் வாங்கிச் சென்று, அவர் முன் கொளுத்தி வைத்து, அனைத்தும் சமர்ப்பித்து, அவர் உரை கேட்டுப் பரவசப்பட வேண்டுகிறேன். அவர் பழுத்த ஞானி. அந்தரங்கமாகத் தரிசித்துவிட்டால் அதுவே போதுமானது. தரிசனம் அவர் அருள் உள்ளத்தில் இடம் பெறுவதன்றி வேறொன்றுமில்லை. நிஷ்காம்ய சந்திப்பே என்று பதில் கூற வாய்ப்பிருந்தால் கூறுங்கள்.

ஓம் ஸாந்தி.

அப்பண்ணா.

5436
R65

அடியேன் சென்னையிலிருக்கும் போது 1-10-62-இல் சிதம்பரத்திலிருந்து அன்பர் ஒருவர், 'தங்கள் குமரை சுவாமி அவர்கள் 28-9-62 அன்று மஹா சமாதியாகிவிட்டார்கள்!' எனத் தந்தி வந்தது என்று கடிதம் எழுதியிருந்தார்கள். கடிதம் பார்த்ததும் மனது படாத கஷ்டம் பட்டது. வழி காட்டிய மஹான் மறைந்தது குறித்துச் சொல்லொணாத் துக்கத்தில்ஆழ்த்தியது. கொஞ்ச நாள் கழித்து மனத்தில் ஒரு தெளிவும் உணர்ச்சியும் ஏற்பட்டது.

ஓம் குருவே நம :

கம்பீரமான தோற்றமும், அருளொளி விழி தீட்சண்யமும்
வெண்கலச் சிரிப்பொலியும் தாயின் பாசமும் குழந்தை உள்ளமும்
சமதர்மக் கொள்கையும் ஒருங்கே அமைந்த எங்கள் அப்பண்ண முனிவர்
அன்பர்களின் இதய குகையில் அமர்ந்தனரே.

மனமார உருகி எண்ணும் போதெல்லாம் அருவுருவமாக இருந்து காத்து இரட்சிப்பார்கள் என மனத்தில் உருவாகியது. அது மாதிரி இன்று வரையில் பல தடவை எண்ணி உருகும் போது கஷ்டமெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல் நீங்குகிறது. யாவருக்கும் இது கண் கூடாகத் தெரியும். சுவாமிகளின் சமாதி வைகுந்தம், இரத்தினம் என்னும் அன்பரால் கோயில் நிர்மாணம் செய்யப்பட்டு, 15-4-64-இல் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. அது முதல் இன்று வரை பூஜைகள் சரிவர நடந்து வருகின்றன. வருஷாவருஷம் பக்தர்களின் நன்கொடையால் அபிஷேக ஆராதனை மாலயபட்ச அமாவாசையன்று நடைபெற்று வருகிறது.

சுவாமி, அன்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், 'காஞ்சனங்காடு இராமதாஸ் சுவாமிகளுக்கு அநேக இரத்தினங்கள் உண்டு. எனக்கு நீங்கள் ஒருவர்தானே !'' என்று எழுதியிருக்கிறார்கள். அவர்கள்தான், சேலம் மாவட்டம், வைகுண்டம் கிராமத்திலிருக்கும் இரத்தினம் என்பவர். சுவாமி இருக்கும் வரையில் சுவாமி என்கின்ற எண்ணம் இரத்தினம

Koviloor Digital Library

மனத்தில் பிரதிபலிக்கச் செய்து, யாவும் செய்து முடித்திருக்கிறார்கள். இன்றும் செய்து வருகிறார்கள். அவர்களால்தான் பள்ளிக்கூடம், சுவாமியின் கோயில், சுவாமி வாழ்ந்த குடில், பூசை செய்யும் அர்ச்சகர் தங்கும் விடுதி யாவும் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆறுமுகம் பிள்ளை, நல்லதம்பி ஆகிய இருவரும் மனம் உவந்து நன்கொடை அளித்த மனையில் பக்தர்கள் தங்கும் விடுதி நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது.

தாம்சுவாமிக்குச் செய்துவரும் காரியங்கள்யாவும் சரியெனப்பட்டால் தமக்குப் பிறக்கும் குழந்தை சாமியின் ஜனன தினத்தில் பிறக்க வேண்டும் என்பது அவரது சங்கல்பம். அதே போல், 64-ஆம் ஆண்டு, பங்குனி சனிக்கிழமையில் ஆண்குழந்தை ஜனனமானது. குழந்தையின் பெயர் அப்பண்ணு என வைத்திருக்கிறார்கள். அன்பர் இரத்தினம் அவர்கள் சுவாமியின் நினைவுச் சின்னமாகப் பவானி, குமார பாளையத்தில் மாஸ்டர்ஜீ பணி செய்து வந்த பள்ளியில் பள்ளிக் குழந்தைகளுக்குத் தண்ணீர் அருந்தத் தொட்டிகளும், குழாய்களும் அமைத்திருக்கிறார்கள். சேலம் சாரதா மகளிர் கல்லூரியில், சுவாமி களின் நினைவில், உணவு விடுதி(Dining Hall) கட்ட நன்கொடை அளித் திருக்கிறார்கள். இது போல் பல தருமங்கள் சுவாமியின் பெயரால் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குருநாதரின் வரலாற்றுக் குறிப்புகள் தந்த அனைவருக்கும் நன்றி. மாஸ்டர்ஜீ அவர்களுக்கும் உளம் கனிந்த நன்றி. ஏஷியன் அச்சகத்தார் இந்த நூலினை நன்முறையில் அச்சிட்டுத் தந்ததற்கு அடியேனுடைய உளம் கனிந்த நன்றி. நம் யாவருக்கும் குருநாதர் அருள் ஆசி அருள்வார்களாக.

தோன்றாமல் தோன்றும் நிலை

ஓர் ஆண்டு தைப்பூசத்திருவிழாவிற்கு, ஆனையாம்பட்டியில் இருக்கும் மைசூர் சமஸ்தான வித்வான் ஜலதரங்கம் சுப்பய்யர், சுவாமி முன் கச்சேரி செய்து ஆசி பெற, வடகுமரை வந்தார். பூசத்தன்று பிற் பகல் விழாப் பந்தலில் ஜலதரங்கக் கச்சேரி நடைபெற்றது. சுவாமி முன்வரிசையில் உட்கார்ந்து ரசித்துக்கொண்டிருந்தார். திடீரென்று சுப்பய்யர், கிண்ணம் தட்டும் கோலை வைத்துவிட்டு, "என் முன் இருந்த சுவாமியைக் காணோமே! எங்கே எங்கே?" என்று அலறினார், சுவாமி அமர்ந்திருந்த இடம் காலியாகவே தென்பட்டது. சில வினாடிகளில் அதே இடத்தில் சுவாமி, "நான் இங்குதானே இருக்கின்றேன். உங்களுக் கெல்லாம் என்ன பிரேமை? சுப்பய்யர்வாள், மேலும் வாசியுங்கள்" என்றார். சுப்பய்யர் எழுந்து, சுவாமிக்கு நமஸ்காரம் செய்து, மேலும் கச்சேரி செய்தார். தாயுமானர் கூறிய "நீர்மேல் நடக்கலாம்" என்ற பாடலில் ஒருவர் கண் விழாமல் திரியும் சக்தியும் சித்தர்களுக்கு அமை கிறது என்பது மெய்யே. நைடதத்தில் தமயந்தியின் அந்தப்புரத்திற்கு நளன் சென்ற சந்தர்ப்பம் இங்கு நினைவு வருகிறது.

இயற்கையன்னை எழிலில் இறையருள் உணர்பவர்

இயற்கை அன்னையின் தாண்டவங்களை வயற்புறங்களில் பச்சைப் பட்டுமெத்தை விரித்ததையொப்பப் பயிர்களின் தோற்றம், வீசும் காற்றால்

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307



ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள்
வடகுமரை

Koviloor Digital Library

Koviloor Digital Library

அவை தலை தாழ்த்தியும் தலை நிமிர்ந்தும் அசைந்தாடும் வகையில் சிற்றலையின் நெளிவு, மரம், செடி கொடிகளின் அசைவு, அவை வளர்ந்து வரும் வனப்புநிலை, வண்ண வண்ணப் பூக்களின் வடிவழகு, வெளிப் படுத்தும் நறுமணம், புள்ளினங்கள் செய்யும் ஒலி பேதங்கள், மலைகளின் சிகரம், தொடுவானநிலை, அருணோதயம், சந்திரோதயம், முதலியன கண்டு, கேட்டு, களித்து ஆய்ந்து, சிந்தித்து, தெளிவுற்று "எல்லாம் பிரம்ம மயம், பிரணவநாதம், இன்பமயம்" என்று உறுதி பூண்டு, நெடு நேரம் லயித்து எதிலும் தானாகி, தான் அதுவாகி, ஒன்றி, பேரின்பம் கொள்வார். அண்ட சராசரங்களையும் ஆட்டி வைக்கும் அகிலாண்டேஸ் வரியின் கருணைப் பிரபாவத்தை உணர்வார். ஆசிரமத்தில் வெளியில் காக்கை, குருவி, கிளி, குயில் முதலியன கூட்டமாக அடிக்கடி சூழ்ந்து, வித வித ஒலி கிளப்பி, பறந்து செல்வது கண்டு மிகவும் ரசிப்பார். ஆசிரமத்தில் மயில், பூனை வளர்த்து வந்ததுண்டு. ஒரு நாகசர்ப்பம் அடிக்கடி குடில் பக்கம் வந்து வந்து சுவாமிக்குக் காட்சி தந்து செல்லும். "ஜீவ பேதமற்ற சுவாமியைத் தரிசிக்கவந்ததோ நாகம்" என்ற வினவும் எழுகின்றது. "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்று பாரதியார் கூறியதற்கொப்ப, சுவாமி ஜீவராசிகளிடம் பேதமுறாது, அவையோடு நெருங்கி வாழ்ந்து வந்தார். "வெட்ட வெளிதன்னை மெய்யென்று" தெளிந்து உணர்ந்து வாழ்ந்தவர். "எல்லார்க்கும் மேலாம் ஈசன். அவன் சரண் அடைய வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து அன்பை வளர்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறுவர்.

எறும்புக் குழிகளைச் சுற்றித் தானியம் தெளித்துக் கூர்ந்து கவனிப் பார். பல்லாயிரக்கணக்கில் எறும்புகள் வெளிப்பட்டுத் தானியத்தைப் பற்றிக்கொண்டு சாரைசாரையாகச் செல்லும காட்சியைக் கண்டு பேரானந்தத்தில் மெய் சிலிப்பார். லட்சக்கணக்கான சாதுக்களுக்கு அன்னமிட்டது போலப் பெருமிதம் கொண்டு "கல கல" எனச் சிரிப் பொலி கிளப்புவார். இருகண்களிலும் "ஆனந்த பாஷ்பம்" பொழியும்.

நினைத்ததை முடிக்கும் வல்லமை கொண்டவர்

ஒரு வருஷம் தைப்பூச விழாவில் அன்னதானம் மாலை வரை ஓயாது நிகழ்ந்தது. இரவு 8மணி அளவில் எதிர்பாராது 300 பேர்கள் கொண்ட ஒரு கூட்டம் விழாப் பந்தலில் புகுந்தது. சுவாமி அரசமர மேடையில் வீற்றிருந்தார். வந்த கூட்டத்தினர் "சுவாமி! மிகவும் பசிக்கிறது, சோறு போடுங்கள்!" என்றனர். சமையற்காரர்கள் அல்லும் பகலும் சலியாது உழைத்து அப்போதுதான் வந்து படுத்தார்கள். உணவெல்லாம் தீர்ந்தும் போயிற்று. சுவாமி சிந்தனையில் ஆழ்ந்தார். அம்பிகை அன்ன பூரணியை நினைத்து எழுந்து சமையல் கொட்டகைக்குச் சென்று சுற்றி வந்தார். சுருட்டி இருந்த பாயை நீக்கினார். என்ன ஆச்சரியம்! அன்று மலர்ந்த மல்லிகைப்பூவைப் போல ஆவி கிளம்பச் சுடச்சுட அன்னமலை தேவையான அளவு இருந்தது. தக்க குழம்பு, ரசம் ஆகியன பாத்திரங் களில் நிரம்பி இருந்தன. சுவாமி குதூகலித்து பணியாட்களைக் கூப்பிட்டு, "சமையற்கட்டில் வந்து பாருங்கள், எல்லாம் இருக்கிறது, பரிமாறுங்கள்" என்றார். அங்கிருந்தோர் யாவருக்கும் சுவாமியின் சக்தி மேலும் விளங்கியது. ஆனந்த நிலையுடன் வந்த கூட்டத்தினருக்குப் பரிமாறிப் பசி ஆற்றினர்.

Koviloor Digital Library

கண்ணன் போன்று காத்தது

வெண்குளம் என்றோர் கிராமம். இது பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்தது. சுவாமியின் இருப்பிடமான வடகுமரைக் கிராமத்திற்கு 15 மைல் தூரம். வெண்குளத்தில் பத்மாவதி என்னும் அம்மையார் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தார். அந்த அம்மையார் சுவாமியை "அண்ணு" என்றே அழைப்பது வழக்கம். ஓர் இரவு நோய் மிகுந்து வேதனையளித்தது. மரணமே சம்பவிக்கும் என்று சுற்றத்தார் தீர்மானித்துவிட்டனர். மாஸ்டர்ஜி தம் மனைவியான பத்மாவதியைப் பார்த்து, "உலக நினைவை விடு. உன் இஷ்ட தெய்வமான பழனி முருகனை நினை. உன் அண்ணுவைக் கூப்பிடு" என்றார். உடனே, கணவன் சொல்படி "அண்ணு" என்று இரு முறை கூவினாள். "இதோ வந்தேன். பயப்படாதே, பத்மா" என்று பதில் கூறியவாறு படுக்கையில் உள்ள பத்மாவிற்கு ஆறுதல் அளித்தார். இரண்டு நாட்களுக்குள் நோய் குணமானபின் சுவாமி வடகுமரை சென்றார். "அண்ணு" என்று அலறியபோது "வந்தேன், பயப்படாதே" என்ற காட்சி, கண்ணன், துரோபதையை மானசம்ரக்ஷணம் செய்ய வந்த சந்தர்ப்பத்தை நினையூட்டுகிறது என்பதில் தடை ஏது? அழைத்ததும் வந்தார், ஆனந்தம் தந்தார்!

Koviloor Digital Library

வெறியனின் யாத்திரை

மனமெனும் வெறியன் ஒருவன், ஞானச் செல்வமின்றி வறுமை தாங்க மாட்டாதவனாய்த் தனது பிரவர்த்தி, நிவர்த்தி எனும் இரு மனைவியர் இருபக்கமும் அணைத்தபடி உலக வாழ்வைக் காணப் பொருள்கள் நிறைந்த கூடையொன்றைத் தலையில் சுமந்தவனாய் ஜன்மாந்திர ஸமஸ்காரங்களாகிய முடிப்புகளுடன் புறப்பட்டான். அவனது இரு தோள்களிலும் சுத்த புத்தி, துர்புத்தி ஆகிய இரு குழந்தைகள் உட்கார்ந்திருந்தனர். அவித்யை ஆகிய தாய் இடக்கரத்தையும்; அஞ்ஞானமாகிய தந்தை வலக்கரத்தையும் பற்றி நின்றனர். அவனது அரைஞாணோடு இணைபட்ட ஆசையெனும் கிழட்டு எருது பின்தொடர்ந்தது. அவன் பிரயாணம் செய்யும் ஆன்ம பாட்டையில் விவேகமென்னும் நதி குறுக்கிட்டது. அதில் உள்ள (பக்தி, யோகம், ஞானம் ஆகிய பலகைகளால் இணைக்கப்பட்டது) படகில் ஏற எண்ணினான். கூட இருந்த தாய், தந்தை, தாரம்,சுதர், ஆசையெனும் எருது, விஷயக் கூடை - இவைகளையும் ஏற்றுக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினான்.

நதியின் பிரவாகம் அதிகரித்தது. கொந்தளிப்பின் மிகுதியால் படகு கவிழும் போல் இருந்தது. "ஏ, பரந்தாமா! என்னையும் என்னுடையதென்று நான் அபிமானிப்பவைகளையும் காப்பாற்று" என்று உருக்கமாக வேண்டி நின்றான். நதியின் கால்பாகம் கடந்தான். முன்னைக்காட்டிலும் பிரவாகம் அதிகரித்தது. படகு கவிழும் என நினைத்து, நிவர்த்தி எனும் மனைவியின் யோசனைப்படி, கிழட்டு எருதையும் ஆற்றில் தள்ளிவிட்டான். பிரவர்த்தி என்பாள் மனம் தாங்காது ஆற்றில் குதித்து அமிழ்ந்தாள். தாயும் தந்தையும், மருமகள் இறந்தாள் என்னும் துக்கத்தால் பிராணனை விட்டார்கள். செத்த பிணங்களைச் சுமப்பானேன் என்று அவைகளையும் ஆற்றில் தள்ளினான். இதற்குள் படகு நடு ஆற்றை அடைந்தது. அநுபூதி என்னும் சுழியுள் படகு கவிழ்ந்தது. நிவர்த்தி என்னும மனைவியும் புத்திரர்களும் என்ன ஆனார்கள் என்பதையும் கவனிக்க முடியாதவனாய்த் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பிரயத்தனத்தோடு தன் முழுப்பலம் கொண்டு ஆற்றில் நீந்தத் தொடங்கினான்.

"அந்தோ! ஜகதாம்பிகே! என்னுடையது என்று கருதியவற்றையெல்லாம் ஒழித்தாய். என்னையும் இந்நதியில் மூழ்குவிக்க எண்ணினையோ? கால் கைகள் சோர்கின்றன. என் செய்வேன்? உயிர் துடிக்கிறதே! என் எண்ணங்களும் சோர்வும் நன்றாகத் தெரிகின்றனவே. இவற்றையெல்லாம் அறியும் நான் யார்? இவையெல்லாம் என்னிடம் தானே நிகழ்கின்றன என்று எண்ணும்போது, 'ஓ! 'நான்' என்னும் எண்ணம் மறைந்துவிட்டது. நான் ஒழிந்தேன்" என்று எண்ணியபடி மூர்ச்சை அடைந்தான். தெளிவடைந்தபோது, நதிக்கரையில் தான் இருப்பதையும், ஸ்ரீ அருட்பிரகாசவள்ளல் தன்னை அணைத்து ஆதரவு காட்டுவதையும் அறிந்தான். எங்கும் ஒரே ஜோதி! கோடி சூரியன் உதித்தது போன்ற பிரகாசம் தோன்றினும் கண் கூசாத நிலையை அடைந்தான். நீல வானத்தின் அழகு உற்சாகப்படுத்தியது.

"நான் யார்? எங்கு இருக்கிறேன்? இவைகள் எல்லாம் யாவை?" என்று சிந்தித்தவனாய் ஆச்சரியத்தில் மூழ்கி இருக்கும் நிலையில் இத்தனையும் தன் வடிவமே என்று அறிந்து சாந்தி பெற்றான்.

Koviloor Digital Library

ஸ்வாமிகளின் திருப்பவன அமிர்தம்

எனது அன்புள்ள நண்பரே ! கடவுளை நம்பு ; விஞடி, நிமிஷம், மணீ நாள், வாரம், மாதம், வருஷம் எனவும் ; குழந்தைப் பருவம் முதல் காளைப்பருவம், நடு வயது, கிழத்தனம் என்றும் காலத்தை எண்ணுவதும் எல்லாம் இறப்பவை. வாழ்க்கையின் கனுக்கள் நெஞ்சில் சக்கரம் போல் சுழலும் சமபவங்கள். 'நானே' அழியாதது, பொய்யான விஷயங் களை எப்படி எழுதவோ விளக்கம் செய்யவோ முடியும் ? தயங்காதே ! எதற்கும் கடவுளையே நம்பு. நாம் பரிபூர்ண ஆனந்தம் எய்தும் வகை யில் நம்மிடம் உள்ள தப்பு எண்ணங்களையும் தவருன நடவடிக்கைகளை யும் ஒழிக்கவேண்டும். ஸ்ரீ இராம கிருஷ்ணரின் பொன் மொழிகளைப் பின்பற்ற வேண்டும். ஸ்ரீ விவேகாநந்தரைப் போல் அழியாத இன்ப நிலையை அடைய வேண்டும். பிறருக்கு உதவுவதைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆத்மீகப் பயிற்சிகளை நாம் பினபற்றினல் நம்முடைய சரீர பலமும் அதிகமாவது நிச்சயம். ஆனுல், அத்துடன் முயற்சியை நிறுத்தி விடக்கூடாது. விடா முயற்சியுடன் ஆத்மீக பலத்தை அதிகரிக்கச் செய் தால் வரவரப் புற உலகை மறக்கவும் உலக இன்பங்களை வெறுக்கவும் முடிகிறது.

பிரமச்சரியத்தைக் கண்டிப்பாகக் கடைபிடித்தாலொழிய ஆத்மீகத் துறையில் நாம் உச்சநிலையை அடைய முடியாது. பிரமச்சர்யம், உலக வாழ்க்கைக்கும் ஆன்மீக வாழ்க்கைக்கும் மிகவும் அவசியமானது. ஞானத்திஞல் தன்னைத் தானறிந்து கடவுளை அடைய முடியும். நமக்குள் ஆத்மிக ஒளி இருக்கிறது. வேசிகளின் சேர்க்கையால் அந்த ஒளி மழுங்கி, ஞானம் கெட்டு, அவலநிலை அடைகிருேம். பராசரரும், விஸ்வாமித்திரரும் பெண்மையில் சிக்கி அவதிப்பட்டதாலேயே நாமும் அவ்விதம் கஷ்டப்பட வேண்டியதில்லை. அருட்பெருஞ்சோதி இராம லிங்க ஸ்வாமிகள் நமக்காக போக ரகஸ்யங்களை வெளிப்படுத்தி, நாம் பூர்ண நிலை அடைய உதவி செய்து இருக்கிருர்கள். அவருடைய திரு வருட்பாவை ஊன்றிப் படித்துப் படிப்படியாக ஆன்மத் துறையில் மேலே ஏறுவோமாக !

நம்முடைய பிரம்மசரியத்தை நழுவவிட்டால் தேகம் பலஹீனம் அடைந்து, கிழத்தன்மை அடைந்து, வாழ்வு மெலிந்து இறந்துவிடு கின்றேம். ஒரு நாகத்தைக் கண்டால் நாம், "நாகராஜாவே, உன்னுடைய முகத்தை மறைத்துக்கொண்டு உன் வாலை மட்டும் காண்பிப்பாயாக !" என்று சொல்கிறேம். அது போல், ஒரு ஸ்திரீயைக் கண்டதும் அவளை நாம தா யனப் பாவித்து, வணங்கி, அவள் முகத்தைப் பாராமல் பாதத் தைத் தரிசிக்க வேண்டும். இவ்விதம் செய்தால் சந்நியாசியுள்பட ஒவ் வொரு பக்தனும் ஒவ்வொரு பெண்ணையும், அவள் விபச்சாரியாக இருந் தால்கூட, தெய்வலோக மாதாவாகப் பாவிக்க முடியும். தனிமையில் ஒரு பெண்ணைச் சந்தித்து, தன் அன்னையாகப் பாவித்து வணங்கிச் செல்பவனதான் உண்மையில் துறவியாவான். பலர் அறிய இவ்விதம் செய்பவன் வேஷதாரியே !

எவ்விதத்திலும் உன் விந்து சத்தை இழக்காதே ! ஆத்மீகத் துறை யில் பயிற்சி செய்து, படிப்படியாக மேலேறி, அங்கேயே இரு. இதை அனுபவிப்பது அருட்பாவில் விளக்கப்பட்டிருக்கிறது. வாழ்க்கையின் இன்பத்தை நாடுவது நமக்கு நாசம். பேரின்பத்தை நாடுவது நமக்கு

Koviloor Digital Library

இன்பம். மோகம் நம்மைக் கொல்லுகிறது. சும்மாயிரு. மௌன நிலை கூடு. துறவு, இன்ப நிலை எய்த உதவுகிறது. பல காலம் வாழலாம் என்று மனக்கோட்டை கட்டுபவர்கள், திடீரென்று காரணம் தெரியாது இளம்வயதிலேயே இறக்கின்றதைத் தினம் நாம் பார்க்கின்றோம். நமக்கும் அதே முடிவுதான். எப்பொழுது வேண்டுமென்றாலும் எதிர் பாராமல் இறக்கப் போகிறோம். இதை அறிந்தாவது ஆன்மிகத்துறை யில் நம் மனத்தைச் செலுத்தி, உண்மைப் பொருளை அறிந்து, ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் போல் இன்ப நிலை எய்துவோமாக!

ஒழுக்கம்

ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

மனிதன் மரித்த பின்னரும் அவனது ஒழுக்கம் நின்று நிலவுகிறது. அவனது எண்ணங்கள் இருந்து வருகின்றன. மனிதனுக்கு உண்மை யில் பெருமையையும் சக்தியையும் அளிக்க வல்லது ஒழுக்கமே! அதுவே உரிய சக்தி, "அறிவே சக்தி எனச் சிலர் சொல்லலாம். ஆனால் ஒழுக்கமே சக்தி" என நான் கூறுகிறேன். ஒழுககமின்றி உயரிய அறிவைப் பெறுவது அசாத்தியமே! நல்லொழுக்கம் இல்லாத மனிதன் இருப்பினும் இறப்பவரோடொப்பர். அத்தகையவர்களைச் சமுதாயம் வெறுத்து ஒதுக்குகிறது. வாழ்க்கையில் வெற்றியையும், மக்களிடையே உயரிய செல்வாக்கையும், ஆத்மிகத்துறையில் சீரிய முன்னேற்றத்தை யும் ஆத்மானு பூதியையும் அடைய நீங்கள் விரும்பினால் மாசு மறு வில்லாத உயரிய ஒழுக்கத்தைக்கொண்டு ஒழுக வேண்டும். மனிதனின் சாராம்சமே அவனது ஒழுக்கந்தான். ஒருவனின் ஒழுக்கம் அவனுக்குப் பிறகும் அப்படியே இருந்து வருகிறது. சங்கரர், புத்தர், ஏசு, முற்கால முனிவர்கள் எல்லோரும் இன்றும் கொண்டாடப்பெறுவதன் காரணம், அவர்களிடம் அமைந்து இருந்த அதிசயிக்கத்தக்க ஒழுக்கமேயாகும். மக்களிடையே அவர்களின் செயல், செல்வாக்கு ஓங்கி நின்றது. அவர் கள் ஒழுக்கத்தின் சக்தியால் மக்களைத் தங்களது மார்க்கத்திற்கு மாறச் செய்தனர்.

ஒழுக்கத்திற்கு முன் பொருளமைக்குச் சிறிதளவும் பெருமை கிடையாது. மாபெரும் ஆத்ம சக்தியே ஒழுக்கம். வெகு தூரம் வரை யிலும் நறுமணத்தைப் பரப்பி நிற்கும் நன்மலர் போன்றதே அது! ஆன்ற குடிச்சிறப்பும், நல்லொழுக்கமும் கொண்ட மனிதன் தோற்றத்தைக்கொண்டு விளங்குகிறான். ஒருவனின் தன்மை அவனது ஒழுக்கமேயாகும். ஒருவன் சங்கீத வித்வானாக இருக்கலாம்; ஒருவன் இசைக்கருவி வல்லுநனாக விளங்கலாம்; திறன்மிகு கவிஞனாகத் திகழலாம், சீரிய விஞ்ஞானியாகத் திகழலாம்; ஆனால் அவனிடம் உயரிய ஒழுக்கம் இல்லையென்றால் சமூகத்தில் அவனுக்கு உண்மை நிலை கிடையாது. அனைத்துலக மக்களும் அவனை இகழ்வர். ஒழுக்கம் என்ற பதம், பரந்தபட்ட பொருளைக் கொண்டது. சுருங்கக்கூறின், அது நற்குணங்களையே குறிக்கும். திரு. இராம நாராயணன் சீரிய ஒழுக்கம் உடையவர் என நாம் கூறுவோமானால், அவரிடம் நற்பண்புகள் அமைந்துள்ளன என்பதே கருத்து. பரந்த அளவில் ஒழுக்கம் உடைய வனிடம் இரக்கம், கருணை, உண்மை, தாராள மனப்பான்மை,

Koviloor Digital Library

மன்னிக்கும் மாண்பு, சகிப்புத் தன்மை முதலிய உயர்குணங்களை நாம் எதிர்பார்க்கிறோம். சாத்வீகக் குணங்கள் அனைத்தையும் அவனிடம் நாம் எதிர்பார்க்கிறோம். நற்பண்புகள் ஒருசில இருந்து, ஒருவன் வேண்டு மென்றே பொய் சொன்னாலோ, சுயநலத்துடனும், பேராசையுடனும் காணப்பட்டாலோ, மற்றவரின் எண்ணங்களைத் துன்புறுத்தினாலோ அவனைத் தீயொழுக்கம் உடையவனென்றே தெரிவிக்கின்றனர். தனது ஒழுக்கத்தை வளர்க்க எண்ணும் ஒருவன், எல்லா விதத்திலும் தன் சுபாவங்களை நல்வழிப்படுத்த முயல வேண்டும். கீதையில் 13-16 அத்தியாயங்களில் தெரிவித்துள்ள நற்குணங்களைக் கொண்டொழுக வேண்டும். அப்பொழுதுதான் அவன் ஒழுக்கத்தில் சிறந்தவன்.

சீரிய நல்லொழுக்கத்தை நீங்கள் வளர்க்க வேண்டும். எண்ணங்கள் தான், சுபாவங்களின் கர்த்தா. இன்று நீங்கள் இருப்பது உங்களது சென்ற காலத்தின் விளைவேயாகும். இவைகள் அனைத்தும் சுபாவங்கள். அத்தகைய சுபாவங்களை, எண்ணங்கள் மூலம் செய்கைகளால் ஆக்கவும் அழிக்கவும் உங்களால் இயலும்.

அயோக்கியன், நிரந்தர அயோக்கியன் அல்ல. விபசாரி, நிரந்தர விபசாரி அல்ல! இவர்களைத் தவசிகள் தொடர்பில்லாவிட்டால் தாங்களும் தவசிகள் ஆகிவிடுவார்கள். ரத்னகர் என்னும் கொள்ளைக் காரர்தான் வால்மீகி முனிவர் ஆனார். நித்தியானந்தர் மீது கல்லெறிந்த ஜகை, மாதை என்னும் இருவர் அவரது சிறந்த சீடர்களாயினர். அவர் களிடம் அமைந்திருந்த மன உருவங்கள், லட்சியங்கள் அனைத்துமே எண்ணங்களைத் தவிர்ப்பதற்கான சக்தி, ஒவ்வொரு மனிதனிடமும் இருக் கிறது. தீய எண்ணங்கள், தவறான உணர்ச்சிகளுக்குப் பதிலாக நல்ல எண்ணங்கள், நல்ல இலட்சியங்கள் கொள்ளப்பட்டால் அந்த மனிதன் நற்பண்புகள் நிறைந்த பாதையில் முன்னேறிச் செல்வது உறுதி. அயோக்கியன் துறவியாகிவிடுவான். பிரதி பக்ஷபாவனை எதிரானதை எண்ணுதல் எனும் முறையால் ஒருவனது சுபாவங்களை, குணங்களை, ஒழுக்கத்தை மாற்றியமைக்க முடியும். தைரியத்தையும், வாய்மையை யும் எண்ணி நின்றால் நீங்கள் தைரியவானாகவும் மெய்யனாகவும் விளங் குவது உறுதி. பயமும் பொய்யுரைக்கும் வழக்கமும் தானாகவே வெருண்டோடி மறையும். பிரம்மசாரியம், நிறைவு இரண்டையும் சிந்தித்து நின்றால் காம விகாரமும், பேராசையும் கணப்பொழுதில் காணா தாகிவிடும். இந்த முறை முற்றிலும் விஞ்ஞான ரீதியில் அமைந்து இருக்கிறது. பொதுவாக அடிமனத்தைப் பற்றிய அறிவில்லாதவர் களும் ஒழுக்க வழக்கங்களை மாற்றியமைக்கும் யோக முறையை அறிய மாட்டாதவர்களும் தங்கள் வாழ்நாள் முழுவதுமே தங்களிடம் உள்ள தீய குணங்கள் தங்களை விட்டுப் போகா என நினைக்கின்றனர். இது ஒரு வருந்தத்தக்க தவறு. எண்ணங்கள், லட்சியங்கள், மன அபிலாஷைகள் எல்லாவற்றினுடையவும் விளைவே ஒழுக்கம். எண்ணங்களையும் அபிலாஷைகளையும் மாற்றினால் உங்களது ஒழுக்கமும் மாறிவிடுவது இயல்பு.

நற்பழக்கங்களை வளர்ப்பதுதான் ஒழுக்கத்தின் வளர்ச்சி. ஒழுக்கத் தின் மாறுதல் பழக்கவழக்கங்களின் மாற்றங்களால் ஏற்படுகிறது. பழக்கங்கள் இரண்டாவது நிலை. ஒழுக்கமே முதல் நிலை. அனேகமாக அதுவே எல்லாமாக விளங்குகிறது. ஆனால், இச்சா, சக்தி, ஆர்வம், கருத்துடைமை, சிரத்தை முதலியவைகளால் அதை மாற்றி அமைப்பது

Koviloor Digital Library

சாத்தியமே. புதிய ஆரோக்கியமான வலுவுடைய நற்பண்புகள் பழைய அனுரோக்கிய அசாதாரண தீய சுபாவங்களை இல்லாததாக்கிவிடுகின்றன; பழைய சுபாவங்களை மாற்றிவிடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. "யோகம்" துறவுணர்ச்சி, பக்தி, பிரார்த்தனை விசாரம் முதலிய நற்பண்புகளுடன் கூடிய தன்னலமற்ற தொண்டினுல் பழைய உலகில் சுபாவங்களைப் புதிய தெய்வீக குணங்களாக மாற்றி அமைக்க முடியும். யம நியமப் பயிற்சி, தலம், நன்னடத்தை, நட்பு, கருணை, கீதையின் 17 வது அதிகாரத்தில் தெரிவித்துள்ள மூலவித தபசு முதலியனவெல்லாம் உயரிய ஒழுக்கத்தை வளர்ப்பதில் பெரிதும் உதவுகின்றன. உயரிய ஒழுக்கத்தை உருவாக்குவது மெத்தக் கடினமாகத் தோன்றினுல் துறவிகளுடன் தொடர்பு கொண்டு வாழுங்கள். அவர்களது பலம் வாய்ந்த ஆத்மீக சக்தியால் நீங்கள் விரைவிலேயே மாற்றப்படுவீர்கள். இந்த நாட்களில் நல்ல மகாத்மாக்களைக் காணக் கிடைக்கவில்லை என ஒரு போதும் குறை கூருதீர்கள். இது உங்கள் தவறு. சிரத்தையுடனும், ஊக்கத்துடனும் என்னைப் பின்பற்றுங்கள். மகாத்மாக்கள் பலரையும் நான் உங்களுக்குக் காட்டுகிறேன். பணிவுடனும் உள்ளத் தூய்மையுடனும் விளங்குங்கள்.

ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அது வாழ்க்கையில் வெற்றியை அளிக்கவல்லது. ஒழுக்கமே துறவிகளின் போர்வையாகும். பழைய தீய சுபாவங்களைப் போக்கப் பாடுபடுங்கள். நல்ல ஆரோக்கிய நற்பழக்கங்களை அன்ருடம் நிலைநிறுத்துங்கள். வாழ்க்கையின் இலட்சியத்தை அடைவதற்கு ஒழுக்கம் உங்களுக்குப் பேருதவியை அளிக்கும். உங்களது இருப்புக்குக் காரணம் ஒழுக்கந்தான். அவ்வரிய ஒழுக்கம் உங்களை ஆத்மானு பூதிக்கு அழைத்துச் செல்லுமாக! உங்கள் எல்லோரிடத்திலும் சாந்தி ஓங்குக. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம், தெரிந்தோம்பித் தேரினும் அஃதே துணை.

அன்பை வளர்த்தலோடு அன்பு வடிவினனுகவே உருப்பெற வேண்டும். வெகுளி உடையவன் தவம் அடையான். பிறரை ஏமாற்றுவது தன் தலையிலேயே மண்ணைப் போட்டுக்கொள்வதாகும்.

எல்லோர்க்கும் நயம் நன்றே. சூது, பொய், கோபம், காமம், சுரண்டல், நானெனும் ஆணவம் - இவை அனைத்தையும் எக்காரணத்தாலும் தலையெடுக்கவொட்டாது அழித்துவிட வேண்டும். வீண்டம்பமும், வேஷமும் வேதனை தரும். தூய சாதனைக்கான வகையில் குழந்தையான நேய வகையில் எப்படி வேண்டுமானுலும் இறைவனை வழிபடுக.

எல்லோரினும் தானே தாழ்ந்தவன்; சிறியவன். அறியாக் குழந்தை என்று நினைத்துக்கொள்வது அகம்பாகத்தை ஒட்ட முதல் வழி. எல்லாம் தெரிந்தவனும் இல்லை; எதுவும் தெரியாதவனும் இல்லை. இறைவனை வழிபடும் பூஜை அனைத்தும் மதுடி விளையாட்டைப் போல் முடித்தால் மீளா நரகுக்காளாவார்.

மெய்யனபோடு களங்கமற்று சுவைத்துணர்ந்து இன்பச்சிலிர்ப்பெடுக்க பாடுவதே ஸாவும் ஒன்று. ஆட்டமும் கூத்தும் பாட்டும் காது கிழியும் டமார சத்தமும் ஓரளவோடு இருப்பதில் ஆக்ஷேபகரம் இல்லை. பூசாரித்தனத்தினுலேயே ஒருவன் பெரியோனுக முடியாது.

ஸாந்தி வேண்டுமானுல் குழந்தைத் தன்மையை ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். தந்திரத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்

Koviloor Digital Library

கொள். காலன் விஷயத்தில் திருவருள் நினைவுகொள்ளப் பெற்றால் சிறிதும் பயமுறு திருப்பாய். ஆக, அமைதியைக் கடற்பரப்பைப் போல் வளர்க்க வேண்டும்.

ஓம் சாந்தி அப்பண்ணு

பூஜா காலங்களில் திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், பிள்ளைத் தமிழ் முதலியனவும் உணர்ச்சியோடு உதவது மிகவும் நல்லது. எந்த தோத்திரமாக இருப்பினும் நாசிகாரோதனம் செய்வதோ, சொற்களை அல்லது எழுத்துக்களை பஜித்துவிடுவதாலோ வழிபாடு விருதாவாகும். ஷ பூசை காலங்களில் வீண் வம்புகளைப் பேசுவதும் நினைப்பதும் தவறு. பூசை செய்பவரல்லாது அருகிலிருப்போரும் மௌனமாகச் சிந்தையை வைப்போர் பெரிதும் நலம் பெறுவார்.

Koviloor Digital Library

ஓம்

வடகுமரை ஞானி

("மருதமலை மாமணியே" என்ற மெட்டு)

விருத்தம்

அன்னையினும் அன்பன் அடியவர்க்குத் தந்தையவன்
ஆன்மப் பெருங்கலையின் அடிமுடியும் கண்டுநின்றான்
தன்னை மறைத்துத் தனைமறந்த வித்தகனும்
தவயோகி அப்பண்ண சாமிபுகழ் வாழியவே !

பல்லவி

வடகுமரை ஞானிபதம் பணிகின்றோம்
வாழ்வில் ஒளிகண்டு முன் நின்றோம்
—வென்றோம் (வட)

சரணங்கள்

1. மலைவனம் எங்கிலும் அரிய பெருந்தவம்
செய்தான் முருகன் வந்தெதிர் நின்றிடவே (வட)

2. எப்போதும் மேலான பூரண வடிவாகி
இச்சையொன் றில்லாத சிந்தையான் (வட)

3. ஏழைகள் வந்தாலும் செல்வர் தொடர்ந்தாலும்
யாவரும் ஒன்றாக நினைப்பவனும்
ஆறுகண் டேழேறி எட்டிய நவஜோதி
அணி மண்டபத்தில் அரசாளுவான் (வட)

4. வன்புற் றரவுடன் அன்புற் றறிதுயுல்
புரிவான் — செயல் — தெரிவான்
இன்பத் தமிழ்தரும் தங்கக் குரலிசை
உடையான்—வெள்ளை—உடையான்

5. கதிரொளி சுடர் விழியான்
கலகல எனும் நகையான்.

Koviloor Digital Library

அகஸ்திய கீதம்

ஸ்ரீமத் நொச்சூர் சுவாமிஜீ அவர்களின் பாடல்கள்

வடகுமரைப் பெருமான்

உலகிது சொப்பனம் அல்மன நிச்சயம்
உடையவர் உட்பெறும் அநுபூதி
உறுபவை சிற்பரன் செயலென நித்தமும்
ஒழுகி அருட்பயன் அதுவாகிச்
சலனம றத்தனே உணர்சுக மெய்த்தவ
ஸஹஜ சமத்துவ இயல் மேவித்
தவளவொ ளித்திரள் அமுது செழித்திசை
மதுர லயத்தினில் மகிழ்வோனே !
நலமுடன் உற்றவர் அவரவர் நட்பென
அனைவரும் ஒப்பிய குருநாதா !
நறுமணம் மிக்கெழ விரியும் இயற்கையின்
நடன நகைப்பொலி அலைமோதும்
வலவ ! தனிச்சிறு குடிசை திருத்தலம்
எனவளர் அப்பண முனிநாம !
வடகும ரைப்பதி வளமை பெறத்தவ
மகிமை பெருக்கிய பெருமானே !

தீப ரூபினி

('நாத தனு மனுசம்' என்னும் மெட்டு)

பல்லவி

தாயே ! அருள் புரிவாய் - அம்பிகே
தயாபரீ ! சரணம் சரணம் (தா)

அ. ப.

நாமங்கள் ஆயிரம் நாவினில் ஞான
நாதம் உணர்ந்தேன் நானும் நாளும் (தா)

Koviloor Digital Library

சரணம்

முத்ரா ஸ்ரீகோண மூல மந்திர
ஜெபதப ரமணீ ஸித்த ரஞ்சனீ
பூர்ணு னந்த சிவரஸ பிம்ப
புவனேஸ்வரி யோக தீப ரூபணி. (தா)

ஓம்

ஞானதியான சமாதியிலே ! - அருள்
நாடகம் ஆடிடும் நாளெதுவோ - ஹரி
நாமத்திலே ப்ரபு நாமத்திலே ஒரு
பித்தனைப்போல் நான் நர்த்தனம் ஆடிடும் நாளெதுவோ

ஹரிஓம் ஹரிஓம் ஹரிஹரிஓம்
ஹரிஓம் ஹரிஓம் ஹரிஹரிஓம்

ஞான போதம்

1. வானிலே நிறைந்த நாதம் வாழ்விலே கலந்த போது
மாசிலாத ஞான போதம் தெளிவாகுமே
கண்கள் - ஒளிமேவுமே.
மானினேர் உலாவுமாதர் தாயராகவே வணங்கில்
மாயையாம் விநோத மூலம்......புலனுகுமே
ஜீவ.....நிலைகாணுமே

2. ஆமெலாம் எலாம் என் — அன்னை ஆடலென்றடங்கி நின்ருல்
ஆட வைக்கும் ஆதிமூலம்...ஆடலாகுமே
யாவும்...காணலாகுமே.
மாமனுதி மூன்று மூன்றில் வேகவேக மூன்று மொன்ருய்
மாரி போல யோகதாரை...அமுதாகுமே
தங்க...மலர்காணுமே

3. நிறமெலாம் கலாபமாகி ஒளிஎலாம் தன்ஆகமாகி
நீலமா மயூர மொன்று — நடம் செய்யுமே
அன்பாய்...வலம் செய்யுமே.
நிலைஎலாம் நின்நேயமாகி நினைவெலாம் நின்நாமமாகி
நெகிழ்வினுல் எந்நாளுமுள்ளம்....இசைபாடுமே
தானே....லயமாகுமே

Koviloor Digital Library

4. நாதமே சரீரமாகி ப்ராணனே ப்ரகாசமாகி
ஜோதி வாழ்வடைந்த போது - மணம் வீசுமே
ஆன்மக் குயில் பாடுமே.
வேலும் — விளையாடுமே.

நாமமேஎன் நெஞ்சமாகி ப்ரேமையே ப்ரபஞ்சமாகும்
நாளிலே குஹேசன் இன்பக்
குரல் — கேட்குமே
தெய்வக் கலைபூக்குமே!

———

Koviloor Digital Library

வடகுமரை ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் அருள்மாலை

காப்பு

காளத்தி நாதன் கணபதி ஞானம்பிகைசெவ்
வேளத் திருமால் விறலநுமான் – நீள
வடகுமரை வள்ளலருள் வாழ்த்தும் தமிழ்ப்பா
தொடர நிதம் செய்வார் துணை.

1. கற்பனை கடந்தாய் போற்றி! காலத்தை வென்றாய் போற்றி!
நற்பொருள் நவின்றாய் போற்றி! ஞான பூ ரணனே போற்றி!
பொற்புறும் குமரைக் கோயில் புனிதனே போற்றி, போற்றி!
அற்புத குணத்தாய் போற்றி! அப்பண்ண சாமி போற்றி!

2. தன்புகழ் அறியாய் போற்றி! தபோதனர் தலைவா போற்றி!
மன்பணி அடியார் சூழும் வடகும ரைக்கண் வாழ்ந்த
என்பெரும் துணையே, எங்கள் இதய நாயகனே போற்றி!
அன்பையே அறிவாய் போற்றி! அப்பண்ண சாமி போற்றி!

3. சோதியே மேனி யாகித் துரியமெய்ஞ் ஞான யோக
வீதியில் உலாவி ஈசன் விளையாடல் எங்கும் கண்டு,
சாதியும் மதமு மற்ற சமரச நெறியில் நின்ற
ஆதியே போற்றி! போற்றி! அப்பண்ண சாமி போற்றி!

4. பன்னசா லையிலே வாழ்ந்தாய் பாமரர் புலவர் நாட,
நன்னயம் மிகுந்தாய் வெள்ளை நல்லுடை அணிந்தாய் செல்வ,
மன்னரும் வியக்கக் கொண்டல் மாரியும் நாணும் வண்ணம்
அன்னதா னங்கள் செய்தாய், ஐய நின் கருணை போற்றி!

5. ஓதாமல் உணர்ந்தாய், வேத ஒளியிலே தவழ்ந்தாய், ஞான
தாதாவாம் அருணைச் சித்தன தண்ணருள் அடைந்தாய், ஏதும்
மோதாமல் முறையாய் வாழ்ந்து, முத்தனாய் முதிர்ந்து
நின்றாய்!
பாதார விந்தம் போற்றிப் பணிகின் றோம்! அணி கின்றோம்!

Koviloor Digital Library

6. கனத்தமின் முகிலே வானைக் கதிரோனை நிலவைப் பாடல்
இனித்ததீங் கவியைத் தேங்கும் இயற்கையின் எழிலைக்கண்டு
தனித்த ஆனந்த மெய்தித் தனையிழந் துருகும் நின்னை
மனத்திலே எழுதி வைத்தோம் கனவிலும் மறக்கி லோமே.

7. வடசென்னி மலையில் அன்று வரத! நீ வைத்த தீபம்
இடமுறும் தேச மெங்கும் இன்னொளி வீசக் கண்டோம்.
கடவுளாய் உயர்ந்தும் எங்கள் காட்சியில் எளியனாகி
அடர்வனம் திரிந்த நின்னை யார்கொலோ அறிய வல்லார்?

8. சித்திகள் பலவும் அந்நாள் செய்தனை என்பர், எங்கள்
அத்த! நின் அன்புக் கீடாய் ஆற்றமற் றுண்டோ, தெய்வ
பக்தியே வடிவ மாகிப் பரமஹம் சன்போல் வாழ்ந்த
சுத்தசத் துவனே போற்றி! சுதந்திர பரனே போற்றி!

9. ஒருமுறை பார்த்த பேரும் உனைஎன்றும் மறவார் என்றால்
முருகனைக் கண்ட கண்ணை முகமல ரொளியைப் பொங்கும்
அருவிபோல் நகைப்பை நீண்ட அறிதுயில் அழகைநோக்கிப்
பருகிய எமது தாபம் தணியுமோ பாரில், ஐயா!

10. இடக்கையால் உண்ணும் போதும், இலைபாக்கு
மெல்லும் போதும்
கடக்கும் நள்ளிரவும் சோதிக் கதிர்முகம் கனலும் போதும்
தொடக்குற நெடுநே ரந்தான் தொடர்ந்துபல் துலக்கும்
போதும்
தடத்துமுன் கண்ட நாங்கள் தரிசிக்க இனியார் உள்ளார்?

11. திண்ணிய கரம கோடி ஜெகத்குரு அன்பைப் பெற்றாய்!
நண்ணிய விநோபா போற்ற நறுந்துழாய் மாலை யிட்டாய்!
புண்ணிய மூர்த்தி யேநீ புரிந்துள்ள புதுமை யெல்லாம்
எண்ணியே இங்கிருப்ப தல்லால் இனி நாங்கள் என்செய்
வோமே!

12. சொல்லாத உவமை யில்லை சுட்டாத பொருளும் இல்லை
செல்லாத நிலைகளில்லை தெளியாத தெதுவும் இல்லை
நல்லாய்நீ தூல மாக நடமாட இலைஎன் றெண்ணம்
இல்லாத படிநீ என்றும் எம்முடன் இருக்கின் றாயே.

Koviloor Digital Library

13. சூழவே தனிகர் நிற்பார் துதிப்பார் மின்படம் பிடிப்பார்
ஆழிபோல் அறிவுற் ருேரும் அதிசயித் திடுவார் நீயோ
கூழிலே சுவையைக் கண்டாய் குடிசையே அமைதி என்ருய்
ஏழையாய் வாழ்ந்த நின்சீர் எவரெடுத் தியம்ப வல்லார் ?

14. முப்பாழ் முக்கலே என்ருேடி மூச்சினே முறுக்கிக் கட்டி
வெப்பாக விழிக்கும் பாதை வேண்டாம், மெய்யன்பால் உண்மை
தப்பாமல் மனம்க சிந்து சதாபக்தி செய்வீ ரென்றே
இப்பாரில் உபதே சித்த ஏகனே போற்றி போற்றி.

15. கனேப்புறும் பீடமில்லே கனத்தஆர்ப் பாட்ட மில்லே
தனேப்பிறர் வணங்கும் போது, தடுத்துத் தெய்வத்தைப் போற்றி
நினேப்புறப் பணிவீ ரென்று நிறுத்துவாய்! அகங்கா ரத்தின்
முனிப்பிலே இருப்பார்இந்த மூலத்தை உணர்தற் காமோ.

16. வரும்போதே அமைதி கொஞ்சும், மனே களில் மகிழ்ச்சி பொங்கும்
கரும்பாகப் பேசக் கேட்போர் கவலேகள் அனேத்தும் தீரும்
திரும்பநீ சென்ருல் எங்கள் சிந்தையும் தொடரும் ஐயா
இரும்பெரும் பிறவி நின்றன் இணக்கத்தால் இனித்த தன்றே.

17. தாளுக நொச்சூர் வந்து சகஜமாய்ப் பழகிப் பேசி
ஆனுத தமிழ்த்தே னூற்றும் அகத்திய கீதம் கேட்டுக்
கானுறு போல நெஞ்சம் களித்தவித் தகனே நின்னே
வானுடர் அறியார் என்ருல் மற்றும்யார் வழுத்த வல்லார் ?

18. மாசிலா வெள்ளே லிங்க மகாஅபி டேகக் கூட்டம்
தேசுறும் தமிழ்நா டெங்கும் சீர்பெற நடக்கும் வண்ணம்
ஆசியும் துணேயும் நல்கி அகலாது தொடர்ந்த அன்பைப்
பேசினுல் அதுவே யின்று பெருநூலாய் விரியும் மாதோ.

19. நடமிட்ட மயிலோன் அன்பன் நாட்டுக்கோர் தலேவ னுகும்
திடமுத்து ராம லிங்கத் தேவரும் நீயும் நானும்
இடமொத்துச் சென்ற ஊர்கள் எத்தனே! எங்கும் பெற்ற
கடலொத்த அனுப வங்கள் கருத்தினுல் எண்ணப் போமோ !

Koviloor Digital Library

20. நின்முகம் பார்த்த வர்க்கு நின்தொண்டு புரிப வர்க்குப்
பொன்மொழி கேட்ட வர்க்கு, போசனம் அளித்த வர்க்குத்
தன்னிணை யில்லாய் ! இந்தத் தரணியில் குறையே இல்லை
இன்னலும் வினையு மில்லை என்றும்மங் கலவாழ் வாமே.

21. அப்பனே அண்ணு போற்றி ஆருயிர் அமுதே போற்றி
ஒப்பிலா ஒருவா போற்றி உண்மையின் உருவே போற்றி
கொப்புற வணங்கும் அன்பர் குலத்தைஎந் நாளும் காக்கும்
சுப்பிர மணியா போற்றி ! சுவாமியே போற்றி போற்றி !

5436 R65
KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஏஷியன் அச்சகம், சென்னை-600014.